உ

பரமபதிதுணை.

மதுரைச் சொக்கேசர் வந்தி பிட்டுக்கு

மண்சுமந்த காதற் கண்ணிகள்.

இஃது

மதுரை வடக்கு லயன்தெருவில் வசிக்கும்

வாணிப வைசிய ராயிரத்தொருவரில்

காகந்தை மஹாரிஷி கோத்திரம்

சொக்கலிங்கம் செட்டியார்

குமாரன்

சொ. கூ. பழனியப்ப செட்டியார்

இயற்றியதை,

மேலூர்த் தாலூகா கொட்டாம்பட்டி

எம். கருப்பையாப் பாவலராலும்,

மதுரை புதுக்குயவர் பாளையம்

சொ. சின்னச்சாமிக் கவி ராஜராலும்,

பார்வையிட்டு

மு. மாரியப்ப செட்டியா ரவர்களால்

மதுரை

காஸிம் அச்சுயந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1896.

Registered Copy Right.

முதற்பதிப்பு, காப்பி 4000.

சிவமயம்.

சாத்துக்கவிகள்.

——(*)——

திருவானைக் காவலில் வசிக்கும்

ஆறுமுகத் தம்பிரா னவர்க ளியற்றிய

அறுசீர் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பொன்பூத்த புகழ்பாண்டி மண்டலத்து புனிதமெலாம்
பொலிந்து தோன்றும்
நன்பூத்த மதுரைவளர் வைசியநற் குலத்துளோர்
நலம்பெற் றோங்க
மின்பூத்த வக்குலத்து வருமுத்து மாமகிபன்
விரும்பி யீன்ற
மன்பூத்த கோவிந்த வள்ளலொடு மாரியப்பன்
மகிழ்ந்து கேட்க. (1)

அப்பெரிய புகழ்பாண்டி மண்டலத்து ளான்றோரா
லர்ச்சித் தேற்றும்
ஒப்பரிய ஆலாஸ்ய மகுத்துவத்து ளொருமைபெற
வீடுற் றோங்கும்
செப்பரிய வக்தியென்பாள் செயலைநீ புதுக்கியின்று
தருவா யென்னச்
சொற்பெரிய காவலர்கள் சூழ்கிலெக்கின் கணியாகத்
துலங்கி வாழ. (2)

சொற் சுவையும் பொருட்சுவையுந் தூய்மைபெறப்
பலவிதமாய்ச் சொல்லியீசன்
நற்சுவைய பிட்டுண்ட ஆடலினை நனியெடுத்து
நயப்பா வோங்க
எச்சுவையு மினிதில்லை!யென வெவருங் காதலொடு
மின்பமாக
முற்சுவைய பழனியப்ப னாங்கேற்றி முதன்மைபெற
மொழிந்தான் மாதோ. (3)

மதுரை ஜில்லா மேலூர்த் தாலூகா

கொட்டாம்பட்டி

எம். கருப்பையாப் பாவல ரவர்களியற்றிய

வசன ரூபச் செய்யுட்கள்.

மதுரை நகரிற் சோம சுந்தரர், முன்னாள் வந்திதந்திடும் உதிர்ந்த பிட்டுத் தின்றதற்கு, தலைமேல் வைகைக் கரைமண் சுமந்து அருள்செய் யற்புதமதை கைக்கனிபோல் ஈசன் செயலாற் பரஞ்சோதி முனிவர் முன்பாடிய திருவிளையாடலிற் சொல்லியபடி; மிகுந்த மதுரச்சுவையாகுஞ் சொற்களால் யாவருந் தமது சிந்தைமகிழ்ந்து வாசித்து, மேன்மைச் செல்வங்களொடு வாழ்ந்து பின்போ; சிவபதம் புகுதும் போதகிலேயே சொந்தமாகப்பெற்று, உய்ய நல்ல மார்க்கமென்று காதல் கொளவே கனிந்து, ஓர் நூல்சொல்லென; அன்புற்று முந்து செட்டியாரவர்கள் மக்கள், அரியின் பத்திசெய்து சைவைமிற் சிறந்தும், இன்பம் பெற்றும் செல்வத்தில் வாழ்வுற்று ஓங்கிவவர்கள்; கோவிந்தஞ் செட்டியார் சோதரர் மாரியப்ப செட்டியார் கேட்க மனமுவந்து யாரும் எளிதிற் பயன்பெற வுதாரணத் தோடுங் கவனமாயும் பாடிக்கொடுத்தார்; நம் சொக்கலிங்க செட்டியார் தவத்திலே பிறந்த மைந்தர் கல்வி, யருட்பேறு, அறிவாலெங்கு ஞ்சிறந்து அமைந்த செல்வர் மதிப்பால் அதந் தழையச் செய்யும் பழனியப்ப செட்டியார் அந்நூலை வையகத்தில் கற்றவர் வாழ்வார்.

இவ்வசனம் செய்யுளாமாறு காண்க.

வெண்பாக்கள்.

குளகம்.

மதுரைநக ரிற்சோ மசுந்தரர்முன் னாள்வந்
திதந்திடுமு நிர்ந்தயிட்டுத் தின்றற்—குதலைமேல்
வைகைக் கரைமன்சு மந்தருள்செய் யற்புதம
தைகைக் கனிபோலீ சன். (1)

செயலாற் பரஞ்சோ திமுனிவர்முன்பா
டியதிருவி ளையாட லிற்சொல்—வியபடிமி
குந்தமது ரச்சுவையா குஞ்சொற்களால்யாவ
ருந்தமது சிந்தைமகிழ்ந் து. (2)

வாசித்து மேன்மைச்செல் வங்களொடு வாழ்ந்துபின்
போசிவப தம்புகுதும் போதகிலே—யேசொந்த
மாகப்பெற் றுய்யநல்ல மார்க்கமென்று காதல்கொள
வேகனிந்தோர் நூல்சொல்லென. (3)

அன்புற்று முத்துசெட்டி யாரவர்கள் மக்களரி
யின்பத்தி செய்தீகை யிற்சிறந்து—மின்பம்பெற்
றுஞ்செல்வத் தில்வாழ்வுற் றோங்கியவர் கள்கோவிந்
தஞ்செட்டி யார்சோ தரர். (4)

மாரியப்ப செட்டியார் கேட்க மனமுவந்தி
யாரு மெளிதிற்ப யன்பெறவு—தாரணத்தோ
டுங்கவன மாயும்பா டிக்கொடுத்தார் நஞ்சொக்க
லிங்கசெட்டி யார்தவத்தி லே. (5)

பிறந்தமைந்தர் கல்வியருட் பேறறிவா லெங்குஞ்
சிறந்தமைந்த செல்வர்ம திப்பா—லறந்தழையச்
செய்யும் பழனியப்ப செட்டியா ரந்நூலை
வையகத்திற் கற்றவர்வாழ் வார்.

மதுரை புதுக்குயவர் பாளையத்திலிருக்கும்

சின்னச்சாமிக் கவிராஜரவர்க ளியற்றிய

அறுசீர் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மண்டலத்தோர் புகழுமுத்து மகிபனருள் மாரியப்ப
மன்னன் கேட்க
அண்டர்பணிந் தேற்றுமது ரேசர்பிட்டுக் காகமண்ணை
யள்ளி யன்பாய்ப்
பண்டுசுமந் தோர்கதையைக் காதலெனப் பழனியப்பன்
பகரும் விந்தை
கண்டுபெணு முடிவேந்த னதிகவியப் புற்றுமனங்
களித்தான் மாதோ. (1)

இதுவுமது.

மருமணக்குந் தென்மதுரைச் சொக்கலிங்க மகபதிதன்
வரத்தால் வந்த
உருமணக்கும் வடிவழகன் பழனியப்பக் கவிவலவன்
உலகத் தோர்க்குத்
திருமணக்கும் பரமசிவன் மண்சுமந்த காதலெனத்
திரட்டித் தேவத்
தருமணக்கும் வானுலகத் தமுதினும்பே ரமுதமெனத்
தந்திட்டானே. (2)

மதுரை யானைக்கல் தெரு மகா-௱-௱-ஸ்ரீ

குழந்தைவேலுப் பிள்ளையவர்களியற்றிய.

வெண்பா.

தார்வேந்தர் மெய்க்குந் தமிழாலெஞ் சொக்கேச
ரூர்வைகை மண்சுமந்தங் கோர்வந்திக்—காரருள்செய்
காதையினைக் காதல்கொளக் காட்டும் பழனியப்ப
நீதனறி விற்சேட னே.

பழனுபுரி வாணுப வைசியகுல திலகராகிய
மகா-ள-ள-ஸ்ரீ சித்திரபுத்திரக் கவிராஜரவர்கள் குமாரர்

வேலாயுதக் கவிராஜரியற்றிய

ஆசிரிய விருத்தம்.

சீருற்ற மணிமகுட கிரணவொளி பரவுமதி
திகழுநதி திவலைபூப்பச்
செஞ்சடா டவிவரதன் வந்தியமை யாளெனத்
திகழ்மண் சுமந்தகதையை
வாருற்ற நகர்வணிக குலரத்ன மெனுமுத்து
மகிபனருள் கோவிந்தமா
வள்ளலுயர் துணைவனெனு மகிழ்மாரி யப்பமுகில்
மனதுகந் தினிதுவேண்டத்
தாருற்ற நாகேந்த்ர ரிஷிகோத்ர திலகநற்
றயாளகுண சொக்கலிங்கத்
தவபலசு புத்ரனுயர் பழனியப்பக் கவித்
தண்டமிழ்க் காதல்கூற
ஏருற்ற கலைமுனிவ னுஞ்சுவை யறிந்துமகிழ்
வெய்தி யினிதோடிருப்ப
னென்றுகலை மகளக மகிழ்ந்துமல ரயனுடன்
இன்புற் றிருந்தனளரோ. (1)

மதுரை மாநகரம் மகா-ள-ள-ஸ்ரீ தாமோதர தாசரவர்கள் மாணுக்கர்
முத்துச் சடைய பிள்ளையென்று பேர்விளங்கிய

சடகோப தாசரியற்றிய

விருத்தம்.

அன்பரால் சோமசுந் தரமூர்த்தி தென்மதுரை
யதனிலோர் கூலியாளாய்
ஆடைய தழுக்கிடைத் தோளில்மண் வெட்டிசிர
சதில்மணற் கூடையோடும்
இன்பமிகு வந்திபா லிருகரம தேந்தியவ
ளிடுபிட்டு யாவுமுண்டு
ஏவலாய் வைகையதி லளவுகரை யடையாம
லிருமாப் புடன்படுக்க

உன்பங்கு வேலைசெய் யாதிருந் தனையென்ன
உறுதியென் றரிமர்த்தனன்
ஊக்கமுட னேபிரம் பாலடித்திட முன்பு
உண்மைகொள் சொக்கர்மகிமை
என்பதோ ராடல்தனை வானுபவை சியர்கள்குல
மெம்பர்முதல் மாரியப்பன்
இனிமையொடு கேட்கவும் பழனியப் பன்கூற
மிக்காதலரு மையரிதே.

மதுரை மாநகரம்

மகா-ா-ா-ஸ்ரீ நாராயண தேசிகர் மாணாக்கரும்
தம்புசாமி நாயுடு அவர்கள் குமாரருமாகிய

த. குப்புசாமி நாயுடு இயற்றிய

சந்தவிருத்தம்.

வித்தையாந் தமிழ்க்கோ ரகத்திய முனியும்
மெய்யது குறுகவேபொதிகை
வெற்பிடஞ் சார்ந்து கற்பதற் கானர்
விமலனுந் தில்லையிலேகித்
தித்தையா திரிகி டத்தையா வெனவே
சிற்சபை தன்னில்நின்றாடச்
சேடனும் வெள்கி நாடதைச் சுமந்தான்
திருமினுள் மருமகள்வாணி
முத்தையார் மேனி வெளுத்தக மாலாய்
முளரியோன் நாவிடத்தமர்ந்தாள்
முன்பு வந்திக்கா யன்பின்மண் சுமந்த
முக்கணர் சொக்கலிங்கேசர்
சித்தையா மவர்தன் வித்தையா யென்னெண்
டிருவிளை யாடலோர்பாகம்
செப்பிடும் பழநி யப்பனே யென்னச்
சிறந்தவிக் காதலைக்கண்டே.

விளம்பரம்.

——(*)——

இப்புத்தகம் வேண்டுபவர்கள் மதுரை வடக்கு லயன் தெருவில் 179 நிம்பர் வீட்டிலிருக்கும் எண்ணை வியாபாரம் மு. மாரியப்ப செட்டியாரவர்களிடம் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

விநாயகர்.

சுப்பிரமணியர்.

உ

பரமபதிதுணை.

மதுரைச் சொக்கேசர்வந்தி பிட்டுக்கு மண்சுமந்த

காதற் கண்ணிகள்.

விநாயகர்துதி.

வெண்பா.

திருவைகைக் கூடற் சிவன்வந்தி பிட்டுக்
திருவைகை மண்சுமந்த வின்பர்-திருமுய்கைக்
காதையுயர் காதற் கண்ணிகளாற் பாடுதற்குப்
போதகமெய்ப் போதகங் காப்பு.

சுப்பிரமணியர்துதி.

வெண்பா.

சீருலவுந் தென்பழனித் தெண்டாயு தாமுருகா
பாருலகில் சொக்கரின்மேற் பாடுதற்கு—நேருடனே
மண்சுமந்த பாடல்தனை வாகுடனே காதலதாய்ப்
பண்புடனே செப்பவுங்கண் பார்.

கடவுள் வணக்கம்

வெண்பா.

பத்திதருஞ் சங்கரனார் பாதமதை யோர்மனதாய்
நித்தியமும் போற்றிசெய்து நீகினைந்தாற்—புத்திமிகும்
மெஞ்ஞானம் பாலிக்கும் மேதினியிற் காதல்சொல்வோர்க்
கஞ்ஞானம் நீக்கு மறி *

மகாவிஷ்ணு துதி

விருத்தம்.

மாதவத்துடன் மாயனை மனந்தனில் வாழ்த்திக்
காதலாலிரு கரங்குவித் தவர்மனங் களிக்கப்
போதலர்ந்திடும் நறுந்துளா யருச்சனை புரிந்து
காதல் யான்சொலக் கண்ணனின் பொற்கழல்காப்பே *

சரஸ்பதி துதி.

வெண்பா.

மாமதுரை தன்னில் வளர்வா ணிபர்குலத்தோ
னேமமுடன் காதல்சொல வேகினைத்தேன்-பாமகளே
அற்புதமி தாமென் றருள்வாய் பழனியப்பன்
செப்புந் தமிழ்க் குதவிசெய்.

குரு வணக்கம்.

விருத்தம்.

மேதினியோர் புகழெமது குருராம சாமியெனும் விவேகியின்றன்
பாதசரோ ருகமலரைப் பணிந்துமனு தினமுநெஞ்சிற் பதித்துஞ்சொக்க
நாதனந்நாள் வந்தியம்மை பிட்டுக்காய் மண்சுமந்த நற்சீர்க்காதைக்
காதலெனப் பாடிவைத்தே னிப்புவியிற் பழனியப்பன் கனிந்துமாதோ *

மீனாக்ஷியம்மன்.



சோமசுந்தரேஸ்பரர்.

வழிபடு கடவுள்வணக்கம்

வெண்பா.

அந்திவண்ணன் றன்மகனே ஆதிதிரு மால்மருகா
தந்திமுகத் தோனேநின் றாள்பணிந்தேன்-சுந்தரர்முன்
மேதினியில் வந்துவைகை மீதன்பாய் மண்சுமந்த
காதலைநா னோதவருள் காண். *

நூல்

கண்ணிகள்.

சீர்மேவும் பாண்டித் திருநாட்டிற் றென்மதுரை
யூர்மேவுஞ் சொக்க ருவந்தவிளை யாடல்களை 1

வேத முறைப்படியே மேவுசௌன காதியர்க்குச்
சூதமுனி யென்போன்முன் சொன்ன புராணம்வளர் 2

அறுபத்து நான்குசிறப் பானவிளை யாடல்களில்
உறுமோர் நல்லாட லுகந்துநான் காதல்சொல 3

அன்னை சரஸ்வதியே ஆச்சியே யென்நாவில்
முன்னே ருகந்து மொழிவாய் மனோன்மணியே 4

ஆடலறு பத்தொன்று யார்ந்தவினை யாடல்தனைப்
பாடவர மேயருள்வாய் பாதம் பணிந்தேனே 5

சொக்கர்வினை யாடல்தனைச் சொல்லுவதற் கென்காவில்
சக்கரைகற் கண்டதுபோற் றனிருந்து காதலசொல்வாய் 6

தித்திக்குஞ் செந்தேன்போற் றிகட்டாம லென்காவில்
ஒத்திருந்து பாட வுகந்துவர மேயருள்வாய் 7

அவையடக்கம்.

சூதன்வழி யோதுபரஞ் சோதி தமிழ்க்கடலிற்
காதலுடன் சின்னக் கரண்டிமுகந் தாற்போல 8

செய்யும் புராணமதிற் செப்பும் பொருளதனை
மெய்யாயென் சிந்தை விரும்பி யறிந்தமட்டும் 9

பூதலத்தி லேயுதிரும் பொன்மணியெல் லாம்பொருக்கிச்
சீதமதி யாரம் செயும்வகைபோ லிந்நூலை 10

ஆசைதரும் காதலென அம்புவியிற் பாடிவைத்தேன்
மாசில்லா முத்தமிழின் வல்லோர் மனமகிழ 11

தெரியாம லுந்தெரிந்துஞ் செப்பினு மும்மதனைப்
பெரியோ ரறிந்து பிழைபொறுத்துக் கொள்வாரே 12

ஆக்கியோன் பெயர்.

தாராழி சூழ்மண் கலியுகச காப்தமதி
லோராயிரத்தி யெண்ணூற் றென்பதுபத் தாம்காலில் 13

பேராய் மிகவே பிறந்த ஜயவருடம்
சீராய்த் துலாமதியைச் சேர்தெய்தி நான்கதனில் 14

சுக்கிரவா ரத்தினிலே தோன்றமர பஞ்சமியில்
திக்கு புகழ்மிருக சீரிடநட் சேத்திரத்தில் 15

வந்ததனுர் லக்கினத்தில் வாய்த்தசித்த யோகமமர்
அந்தச் சுபதினத்தில் யானுமிதைச் சொன்னதுவே 16

பார்மேவுந் தென்மதுரைப் பாண்டிநகர் வைசியரில்
நார்மேவும் பூமணம்போல் நாகேந்த்ரன் கோத்திரத்தில் 17

பூதலத்தி லேதான் புகழ்படைத்த சொக்கலிங்க
நாதன்செய லாலுதித்த நற்பழனி யப்பனுடையான் 18

சீலமிகு மயிர்தகச் செந்தமிழின் பாவினஞ்சொல்
வேல னருள்சிறந்த மிக்கபெரி யோர்க்கடியேன் 19

கையுற்ற நெல்லிக் கனிபோ லறியவென்று
மெய்யா யுரைத்தேனவ் விண்ணோ ரமிர்தமிதே 20

நன்னயஞ்சேர் வைகை நதிதான் பெருகிவரச்
சின்னவாய்க் கால்நீருஞ் சேர்ந்தங்கே யோடுதல்போல் 21

மதிபொடுநட் சேத்ரம்விண்ணில் வாழ்ந்தே வருவனபோல்
பதிதனில்வாழ் நாவலர்முன் பால னுரைத்ததமிழ் 22

சிற்சொல்லா னாலுமுங்கள் செய்மொழிபோ லேமகிழ்ந்து
நற்சொல்லி தென்றுநிதம் நட்பாகக் கொண்டருள்வீர் 23

கதையின் வரலாறு.

வேதங்க ளாலும் வியப்பறியக் கூடாத
நாத னெனும்பொருளாம் நற்சோம சுந்தரத்தின் 24

மிக்க திருவடியை மேலாக வேசிரசில்
வைக்குமன்ப ரானவுயர் மாணிக்க வாசகனை 25

மந்திரியாய் வைத்தஅரி மர்த்தனமா றன்பரிக்குத்
தந்தபொருட் காகவருத் தம்புரியச் சொக்கேசர் 26

நீக்கவென்று முன்கொணர்ந்த நீள்பரிக ளத்தனையும்
போக்க நரியாகிப் புறப்பட்டுப் போயினபின் 27

மன்னவனும் பின்னுமந்த மாணிக்க வாசகனை
இன்னலுறக் கன்னுதல்கை யேற்றி யடித்திடவே 28

அன்பருக்கன் பாய்விளங் தும் ஆதிபரஞ் சோதியன்பாய்
துன்ப மகற்றுதற்கோர் சூழ்ச்சியது செய்தனனால் 29

இருகரையும் வைகைநதி யேகவெள்ள மாய்த்திரண்டு
பெருகிவரச் செய்துமொரு பிட்டுவந்திக் காயுவந்து 30

பண்சுமந்த மாமறையோன் பார்க்கவழி யாமுடிமேல்
மண்சுமந்து வைகைநதி வான்கரையி லேயுலவி 31

மாறன் பிரம்படிக்கு மாமேனியைக் கொடுத்துக்
கூறுமருள் செய்தாண்டு கொண்டவிளை யாடலிதே 32

பிட்டுக்கு மண்சுமந்து பின்மன் பிரம்படியைப்
பட்டு பொறுத்தருள்செய் பாண்டியன்மேற் காதல்சொல்வேன் 33

ஆகாயத் தின்முகட ளாவியோ டும்படிக்கு
வேகமதாய் வைகைதனில் வெள்ளம் பெருகியதே 34

மதுரைநகர்க் கேதேதோ வந்தபா யம்மெனவே
எதிரேறி வைகைநதி யின்வெள்ளஞ் சூழ்ந்ததுவே 35

கருங்கடற்குள் ளேஅலையிற் கப்பலகப் பட்டாற்போல்
நெருங்கியதைப் பார்த்தரசன் நெஞ்சம் பதறியுந்தன் 36

மந்திரிமா ரைத்தானும் வாவென் றருகழைத்து
தந்திரமா தாகவந்து தாவும் புனலதனைக் 37

கண்டுநீங் கள்போய்க் கரைகட்டி யேயொதுக்க
விண்டுயா வாக்கும் விலாவிலுலா யுங்களென்று 38

மதுரையழி யாதபடி மாநகரத் துள்ளோருக்
கெதிர்கரைபோ டப்பறையா லேற்றுமென்று னேயரசன் 39

அந்த மொழிகேட் டமைச்சர் மிகவெழுந்து
வந்திவர்க ளூரிலுள்ள வாழுங் குடிகள்தனை 40

மனையொன்றுக் கோராள் வருவீர்கள் வைகைநதி
தனையடைக்க வேணுமென்று சாற்றினா ரேயமைச்சர் 41

உரைத்தமொழி கேட்டந்த வூரிலுள்ள யாவர்களும்
சிரத்தின்மேற் கூடைகொண்டு சென்றார் நதியருகே 42

வந்தவர்கள் தன்பெயரா வாகா யெழுதியபின்
இந்தாவுன் பங்குகரை யிவ்வளவென் றேகாட்டி 43

ஒவ்வொருவ ருக்கும் உரைத்தே தனித்தனியாய்ச்
செவ்வையுற வேலைசெயச் செப்பி யளந்துவிட்டார் 44

அவரவர்க டங்க ளடையாளத் தின்படிக்கே
அவரவர்கள் செய்யென் றறிக்கைசெய்தார் மந்திரியும் 45

நல்லதென்று மேயிவர்கள் நாடியணை போடுதற்கு
வல்லபமா யெல்லோரும் வாரினார்க் கச்சைகட்டி 46

மண்வெட்டு வார்கள் மரங்களெடுப் பார்சிலர்மண்
திண்ணமுடன் கொட்டித் திகையாறி நிற்பார்சிலர் 47

கடலின் முகந்தெழுந்த கார்மேகங் கள்போலே
திடமாக வேநதியிற் சேர்ந்தங்கே கூடலுற்றார் 48

நின்று மரங்கள் நிறுத்தியும்வைக் கோலதனு
லன்றரவ மொப்ப அதைத்திரட்டி யேமுறுக்கி 49

அடியிலமுந் தக்கிடத்தி யதன்மேற் றழைகளையும்
படியவைக்கோற் கட்டுகளைப் பாங்காக வேநிரப்பி 50

கூச்சலிட் டெப்பறைகள் குமுற முழக்கிமண்ணை
ஆச்சுதென்று கூடைகளி லள்ளியே தானிரப்பி 51

எடுப்பார்சிலபேர்க ளேகி விரைவில்மண்ணை
யுடைப்பிலே கொண்டங் குயர்வாகக் கொட்டிடுவார் 52

அந்தமண லாற்கரைக ளாய்ப்பரப்பு வார்சிலபேர்
விந்தையுட னேகரைகள் விண்பார்க் கெழுந்தவுடன் 53

சந்தோஷித் துக்குரவை தான்குழறு வார்சிலபேர்
இந்தா வடைபட் டிருக்கிறதென் பார்சிலபேர் 54

வெள்ளம்வந்து தானுடைத்து வேகமாய்ப் போம்பொழுது
உள்ளங் கலங்கிமிக ஓகோவென் பார்சிலபேர் 55

கொத்தர்சிலர் தச்சர்சிலர் கோடான கோடிஜன
மத்தனைபேர் கூட்டமிருந் தானவனை கிற்காமல் 56

வைகைநதி யைப்பார்த்து வாதாயென் தாயேயுன்
செய்கை யறியாமற் செய்தோம் தெரியாமல் 57

குற்றங்கள் செய்தாலுங் கோதொன்றும் வாராம
லத்தனையும் சிந்தைபொறுத் தாதரிக்க வேணுமம்மா 58

என்னமோ வென்றுசில ரென்றொருவ ருக்கொருவ
ரின்னஞ்சில கூலியர்க ளில்லையெனச் சொல்வர்சிலர் 59

என்றொருவ ருக்கொருவர்க் கிட்டதொரு பங்குகளை
கின்றுகளை யிட்டார்கள் நேமித்த பங்கிருக்க 60

இன்ன மொருகணக்கா ளில்லையென வேசிலபேர்
சொன்னார்கள் வந்தியினாள் சோர்வா யிருப்பதென்றே 61

இப்படியே ஒவ்வொருவ ரும்பேசிக் கொண்டிருக்க
அப்படியே வந்தியம்மைக் காளில்லாச் சோர்வதினால் 62

வந்தவர்கள் யாரார் வராதவர்கள் யாரெனவே
சிந்தையுற்றுப் பார்த்தே தெரிந்தார் சிலபேர்கள் 63

மாமதுரை தன்னில்வளர் வந்தியம்மை யென்றொருத்தி
நேமமுடன் பிட்டதனை நித்தமும்விற் றேபிழைப்பாள் 64

பிட்டதனைச் சுட்டு பிழைத்துவரு கின்றவளாள்
விட்டுப்பதி லாய்தனக்கு வேலைசெய்ய வில்லையென்பார் 65

முந்தினதோர் பிட்டதனை முக்கண்ண னுக்குடனே
வந்தித் தளித்து வருவாள் தினந்தோறும் 66

பிந்துபிட்டை விற்றுப் பிழைத்துவரு கின்றவள்பேர்
வந்தியெனு மோர்கிழவி வாணிச்சி யென்பவள்தான் 67

வந்தியம்மை கூலியாளில்லாமல் வருத்தப்பட்டுச்
சுந்தரேஸ்பரனைத் தோத்திரஞ்செய்தல்.

விருத்தம்.

ஐயனே அரனேயெந்த னுபத்துக் குதவிசெய்வாய்
மெய்யனே நின்னையல்லால் மேதினி தனில்வேறில்லை
துய்யனே அன்பர்போற்றுஞ் சோதியே மழுமானேந்துங்
கையனே கருணைகூர்ந்து காத்தெனை ரக்ஷிப்பாயே *

——*(*)*——

கண்ணிகள்.

விண்ணும்மண் ணும்புகழும் மேலான வைசியகுல
மண்ணுடைய நல்ல மகாரிஷியின் கோத்திரத்தாள் 68

கைமையந்த வந்தியம்மை காதலனு மில்லாத
மைமை யமர்ந்த வருத்தமிக வேயடைந்து 69

அய்யோ சிவனேயென் னுபத்துக் கோருதவி
செய்வோ ரிலையெனவே செப்பி வருத்தமுற்றாள் 70

அரிமர்த் தனராஜன் ஆக்கினையின் வேலைதனைச்
சரியிலையென் றென்னைவந்து தண்டித்தா லென்னசெய்வேன் 71

மாதா பிதாவெனக்கு மாநிலத்தி லேவேறே
ஆதார மில்லையென வையனே நின்னையல்லால் 72

எள்ளளவுந் துன்பமென்ப தேதுமறி யாதவள்நான்
வள்ளலே காக்க வரச்சமைய மென்றுரைத்தாள் 73

இந்தச் சமயத்தி லெற்குதவு வார்களில்லை
வந்ததுன் பத்தின் வரலாறை யென்னசொல்வேன் 74

பாவியா னுமெனைப் பாதுகாக் காவிடிலோ
ஆவி யிருந்தும் அழிந்துஞ் சுகமேது 75

நான்வருந்திச் சொல்லுவதை நாடியதனைக்குறித்துத்
தானறிந்து பார்க்கத் தகாதோ புவிமீது 76

அடியார்க் கடியவரா யாகுங் கடவுளேபெண்
கொடியாள் மயங்கிமுறை கூறுவதை மாற்றிடுவாய். 77

அரிமர்த் தனமன்ன னுக்கினிவந் தெய்திடுமுன்
சரிநான்போ வேன்கூலி தாவென்று கேட்பவரார் 78

என்று புலம்பி இருகண்ணில் நீர்சொரிய
அன்று சிவபெருமா னன்புமிக வேபெருகி 79

{ வந்தியம்மை வருந்துதல்கேட்டு
அந்திவண்ணன் அவள்முன் வருதல். }

விருத்தம்.

முன்ன முன்னமே சுட்டதோர் பிட்டையும்முதியா
ளன்னை செய்தனை யன்புடன்வளர்த்திடு மதுபோ
லென்னைத்தானினைந் தியந்தவள்தனக்கிப்போ தாளாய்ச்
சொன்ன வேலையைக் கேட்டிடுவோமெனத் துணிந்தார் *

———:(-*-):———

கண்ணிகள்.

முன்னமே யுண்டுவக்க முற்பிட்டுத் தானீய்ந்து
நன்னயமாய்ச் செய்துவந்த நற்கிழவி தன்னிடம்போய் 80

உலகமெல்லாந் தானறிய உண்டுமவள் துன்பமதை
விலகவே வேண்டுமென்று மின்னுசடை யானினைந்து 81

பார்வதிபா கஞ்சற்றும் பாராம லேமறைத்து
வீரமுற வேறுருவாய் மெய்யா யெழுந்தருளி 82

அம்மையை வஞ்சித்தே அழுக்குப் பழந்துணியைச்
செம்மையுள்ள தன்னிடுப்பிற் சீரில்லா தேயுடுத்தி 83

தலையிற்சும் மாடுசுத்தித் தான்வைத்துக் கொண்டதற்பின்
அலையாமற் கூடையெடுத் தஃதின்மே லேகவிழ்த்தி 84

தோளிலொரு மண்வெட்டி சோதியுற வேமாட்டி
ஆளில்லா வந்தியம்மை யாளிருக்கும் வீதிசென்று 85

காலன் றனையுதைத்த காலன்மெது வாயுலவிக்
கூலிதந்து வேலைகொள்ளக் கூடியவ ராரெனவே 86

கூறி மலர்ப்பதங்கள் கொப்பளிக்க வேகடந்து
ஏறிலே றும்பெருமா னிச்சைப் படிவரவே 87

துன்பக் கடல்மூழ்கிச் சோர்ந்தவா ணிச்சியிடம்
இன்ப முடனே யியம்பிவரு மப்போது 88

அந்த மொழிகேட் டகமகிழ்ந்து வந்தியம்மை
வந்தாள் வெளியே வருங்கூலி யாரெனவே 89

கூப்பிட்டுக் கொண்டிவள்தான் கொண்டகருத் துக்கிசைவா
யாப்பிட்டுக் கொண்டா னருதியிவ னுமெனவே 90

அப்பாயென் பங்குக் களந்துவிட்ட தோர்கரையை
இப்போ தடைத்துவரு வாயென் றியம்பலுற்றாள் 91

அப்படியே தானுமிவ ராமென்று சம்மதித்துச்
செப்பிடுதா யேநீ செயுங்கூலி யாதெனவே 92

அந்தமொழி கேட்டுவந்தி யம்மைதான் பிட்டமுதைத்
தந்துவிடு வேன்பேர் தடையில்லை யென்றனளே 93

முதிர்வந்தி யம்மையின்பால் முக்கட் சிவன்கனிவாய்
உதிர்பிட் டெனக்கீந் துதிராது நீகொளென்றான் 94

ஆகட்டு மிப்போ ததிகபசி யுள்ளவனுன்
போகட்டுமென் றுதிர்த்து போனபிட்டெல் லாங்கொடம்மா 95

இப்போது சாப்பிட் டினிப்பாரி வேலைசெய்யத்
தப்பாதுன் பங்கடைக்கத் தாவென்று கேட்கலுற்றார் 96

அந்திப் படிக்குவந்தி யாமென் றகமகிழ்ந்து
இங்கா உதிர்ந்திடுபிட் டெல்லா முனக்கெனவே 97

அக்குழாய்க் குள்ளே அடைத்திருந்த பிட்டையுமே
சிக்கை யுடைத்துவந்தி சீக்கிரத்தி லேயதனை 98

தள்ளிமிக வேயவள்தான் தம்பி யெனவழைத்து
அள்ளிப் புசியுமென்று மன்பாக வேகொடுக்க 99

அப்போ திடுப்பின் அழுக்குப் பழந்துணியை
ஒப்பி யவிழ்த்து மொருமுன்றா னைவிரித்தும் 100

வாங்கிப் புசித்துமிக வாகா யிருக்குதெங்கும்
காண்கிலே னென்று கருதிவந்தி யைநோக்கி 101

தாயேநீ தந்தபிட்டு தாய்முலைப்பா லுக்கதிகம்
வாயாற் சொலமுடிய மாட்டா தெவராலும் 102

இந்தவமு தம்போல்நீ யிட்டபிட்டு மாமதுரைச்
சுந்தரே சர்க்கே சுவையறியத் தக்கதுவாம் 103

என்றுசொல்லித் தானு மிவர்தலையைத் தானசைத்து
நன்றாக வாய்த்துதென்று நாடிமிக வேபுசித்து 104.

தந்தைதா யில்லாத் தனியே னுதியெனக்
கிந்த வுதவிகள்செய் திட்டதது வேபோதும் 105

எந்தாயே யெங்க ளிளைப்புமிக வேதீரத்
தந்தாயே பிட்டாற் றைரியம்வந் துற்றதுவே 106

இனியானும் வேலைசெய் கின்றபிட மேயணுகிக்
கனிவாய் முடித்துபின்பாற் கர்ச்சிதமா யான்வருவேன் 107

உந்தன் மனதுவலக யுட்கொளவே யவ்வேலை
இந்தாநான் போய்ச்செய் தினிவருவே னென்றெழுந்தார் 108

யானைக்கொம் மைமுறிக்கு மாற்றங் கரைக்குவந்து
நானேதான் வந்தியம்மை நற்கூலி யாளெனவே 109

வந்தியின் வேலையை அந்திவண்ணன் ஒப்புக்கொள்ளுதல்.

விருத்தம்.

பத்திக்கும் வந்திக்கோர் கூலியா ளெனவந்த பரமன் மிக்கத்
தித்திக்கும் பிட்டுண்டு வைகைநதிக் கரைசென்றச் சீர்த்தி யாளின்
சித்திக்கு மாளெனப்பேர் தெரியவெழு திக்கணக்கிற் சிறக்குமந்நாட்
கெத்திக்குள் ளணையடைக்கும் பங்கென்றான் கஞ்சுகியோரிசைத்தார்
[மன்னே.

கண்ணிகள்.

கணக்கிற் பதியவைத்தார் காம தகனனெவ்போ
னிணக்க முடனவ்வேலைக் கேற்பட்டார் தானுமங்கே 110

முன்னியமண் வெட்டி முடிமே லெடுத்துவைத்து
என்னமோ தான்கனமா யிருக்குதென வேகிழே 111

முழுதும்விழக் கொட்டியபின் முன்போ லல்லாதபடி
அழுதமுக மாய்க்குறைய அள்ளியே தானேகி 112

சும்மாடு கீழேவிழச் சோர்வாகக் கொட்டியபின்
அம்மா திரியே யவிழ்த்துசும்மா டேகாமல் 113

மருபடியுஞ் சும்மாடை வாகாக வேயெடுத்துத்
திருமுடிமேற் றன்படியச் செய்துமணிக் கூடைதனில் 114

மண்வெட்டி முன்போல மாமுடிமேற் றூக்கிவைத்து
விண்பார்த்துத் தான்சுமந்து வேகமாய்க் கொட்டிவந்து 115

இப்படியா கத்தா னிரண்டோர் தரமாக
எப்படிநாம் மண்சுமப்போ மென்றே யிளைத்திவரும் 116

கைகளிலுந் தான்வடுவாய்க் கனத்தமுடி மேல்வடுவாய்
மெய்களிலும் வெய்யோன் விழுந்துமிக வேயழுந்த 117

மாதவனுங் காணு மலர்ப்பாதந் தான்சிவந்த
வேதனைகண் டஞ்சிமிக வெம்பி மரத்தடியில் 118

நிழலதனிற் சற்றேபோய் நித்திரைசெய் வோமென்று
மழுவேந்து மீசன் மனதில்நினைந் தப்போது 119

பார்வதியும் நீர்மகளும் பாங்கா யறியாமற்
சீர்வதியும் பூதேவி தேக மகிழ்ச்சியுற 120

அந்த வெருகிலத்தி லங்க மதைக்கிடத்தி
சந்திரன் வாழ்கின்ற தலைக்குயர மில்லாமல் 121

கூடை தனைக்கவிழ்த்துக் கொண்டு மிவர்தலைக்கு
மேடையதாய் வைத்துமகா மேரு மலைபோலும் 122

தனதி னருள்வடிவைத் தானே மிகநோக்கி
மனதில் நினைந்துமிவர் வாகாய்ச்சற் றேதூங்கி 123

அர்த்தமா மோவடகல் லாலவிருட் சமமாக
விந்தை யுடனலைகள் வீசிக்கொண் டந்நதியில் 124

வரும்வெள்ளத் தையடைக்க வந்தமனி தர்க்கெல்லாம்
குருபோல் முழுதுணர்ந்துக் கொண்டமெஞ் ஞானியர்போல் 125

கண்டு களிக்கவுமே காதலாய் மோனமயம்
விண்டே யுரைப்பவர்போல் மெள்ளவே தானெழுந்து 126

ஆடல் புரிவதுவும் அற்புதசங் கீதரசப்
பாடல் பகர்ந்து பரிகாசஞ் செய்வதுவும் 127

இந்தவித மாகநகைத் தேயிருக்கும் வேளையதில்
வந்திவனை யாரேனும் வாகாய்நோக் கும்பொழுது 128

அவ்விதஞ்செய் யாதபடிக் கஞ்சிப் பயந்தவர்போல்
செவ்வையதாய் வேலைமிகச் செய்து முடிக்கிறதும் 129

வேலைசெய்யும் பேர்களுக்கு மேற்பார்ப்போர் கண்பார்க்கச்
சாலஞ்செய் தேமணலைத் தான்குவித்து மேலேறி 130

தூளெழும்பத் தூளெழும்பத் தோணும லேகுதித்துக்
கேளிமிகச் செய்தே கிளம்பிமிக வோடிவந்து 131

உண்மையொடு செய்தவர்போ லொன்றும்பே சாமலிவர்
மண்மேலுட் கார்ந்திருந்தார் மாவேலை செய்தவர்போல் 132

வேலை மிகச்செய்து மிகவு மிளைத்தவர்போல்
கோலமதாய் வேர்வைமிகக் கொண்டிருந்த பாவனைபோல் 133

வாயினுற் காற்று வரச்செய் திவராற்றி
ஓயாப் பசியா லுடம்புந் தளர்ந்ததுவே 134

கட்டினசும் மாடுடனே களையோடு தானும்வந்தி
பிட்டின்மேல் மிக்கப் பிரியமுட னேகிவந்து 135

துன்பவெள்ளம் நீந்திச் சுழன்று கரையேறி
இன்பவெள்ள மூழ்கி யிருக்கும் முதியாளின் 136

காதுகுளி ரத்தானக் கங்கா தரனுரைப்பான்
நீதியார் காட்டிவிட்ட நின்பங்குக் கேயதிக 137

மாகவணை கட்டிவந்தே னம்மா மிகப்பசியாற்
சோகமுற்றேன் பிட்டிடில்நான் சோம்பலற வுண்டின்னும் 138

வேலைசெய்ய வங்கே விரைவாகப் போகவென்று
ஆலவிட முண்டோன்பார்த் தப்போ துரைத்திடவும் 139

நின்று மனமகிழ்ந்து நீளன்பின் வந்தியம்மை
நன்றெனவே சுட்டபிட்டை நற்கையெடுத் தீய்ந்தனளே 140

சுந்தரற்கு வந்தியம்மை சுட்டுதிர்ந்தபிட்டீதல்.

விருத்தம்.

வந்தியம்மைகைப் பிட்டையும் வாங்கிட வாய்ந்து
தந்திரத்துடன் முந்தியிற் றூவெனத் தாங்கி
அந்திவண்ண னு மாவலாய்க் கரந்தனி லள்ளி
உந்தியேதிரு வாயினிற் கொட்டியு முண்க *

—*-(o)-*—

கண்ணிகள்.

வாங்கி யிருகரத்தால் வாய்நிரம்பக் கொட்டியபின்
தாங்கியகை வாய்ச்சூடுந் தான்பொறுக்க மாட்டாமல் 141

சூடையாற் றும்படிக்குச் சுந்தரருந் தன்கரத்தால்
தாடை யிரண்டையுமே தான்பிடித் தொற்றினரே 142

வாயால்நீ ரூற வரச்செய் திவராற்றித்
தாயார்பால் போலெனவே தானே பதமாக்கி 143

பசிதீர்த்து தண்ணீர் பருகிவிரை வாயெழுந்து
சசிமுடிமீ திற்றரித்த சங்கரனும் முன்போலே 144

கரையடைக்க வந்துபிட் டைக் கையினால் வாய்நிரம்ப
ஊரமுடனே கொட்டியுண்டு மோங்குபலன் பெற்றவன்போல் 145

மண்ணைவெட்டி யேயெடுத்து மாமலர்க்கை யாலேந்தித்
திண்ணமுடன் வேறுபங்கிற் றிட்டமுடன் கொட்டிவிட்டு 146

உடைப்படையக் கண்டுகொர்ச்சித் துள்ளே மனமகிழ்ந்து
அடற்புயத்தைக் கொட்டியப்போ தங்கருகில் நின்றவனை 147

தழுவிமிக வேதானுஞ் சந்தோஷித் தன்பாக
மழுவேந்து மீசனென்போன் மண்ணைவெட்டி யேயெடுத்து 148

கூடையோ டேதடிக்கிக் கொண்டுவிழுந் தேவழுக்கி
வாடையென்றும் பாரான் வரும்வெள்ளத் தோடேபோய் 149

நீந்திமிக வந்தே நினைவாகக் கூடையொடு
ஏந்திக் கரைமேலே றிக்கூடை யைக்கிழே 150

அடித்தடித் தீர மதுபோகச் செய்துமந்த
அடித்தகூ டைதனிலே யவிழ்ந்தகட்டைத் தான்பிரித்து 151

கட்டியே கொண்டு கடுகிமண்ணை வெட்டியொரு
கொட்டுமண் ணையெடுத்துக் கொண்டுபோ யக்கரையில் 152

கொட்டியபின் ஒட்டியதற் குள்ளிருந்த மண்போக
தட்டியதோர் கூடைதனைத் தப்பானுங் கைகழுவி 153

உடைப்பிலே கூடைவிழுந் தோடும் படியாக
அடற்கரத்தாற் றட்டி யதுதவறித் தான்போக 154

வெள்ளத்தில் விட்டு விரும்பி யெடுப்பவர்போல்
கள்ளத்தன மாய்த்தாவிக் கங்கையதி லேவிழ்ந்து 155

அலையதனி லோடவேவிட் டவர்பின் னொருமரத்தைப்
பலமான தெப்பமென்று பற்றி மிதந்ததற்பின் 156

கெட்டிபட லானகரைக் கேகி யிவர்மோதி
அட்டியில்லா மற்றானும் அச்சுழியி லேசுழன்று 157

அழுந்தித்து ரத்திலேபோ யவர்தலையை மேற்றூக்கி
எழுந்துதிரும் பிக்கரையு மேறி மகிழ்ந்துவந்து 158

கைப்பிடியைக் கொட்டுக் கழன்று விழச்செய்து
அப்படியே முன்போ லதிற்கோர்த்து மேயாப்பை 159

வைத்திருக்கித் தானுமிவர் வாகாகச் செய்துகொண்டு
சத்தியில் லார்போலே தவித்துப் பெருமூச்சை 160

விட்டுத் தளர்ந்துநின்று வேர்த்து மிளைப்பாறி
பிட்டின்மேற் சிந்தை பிரியமுடன் கொண்டேதான் 161

இடையிற் றரித்தகச்சி விட்டபிட்டை யேயள்ளி
விடையாரத் தின்றுமற்றோர் வேலைசெய் யாதபடி 162

சிலர்க்கந்தப் பிட்டையள்ளித் தின்னுமென வேகொடுத்து
உல்லிவிளை யாட்டுடனே யோடி மகிழ்ந்திருந்தார் 163

வேலைசெய்ய வில்லையென்று மேற்பார்க்கும் வீரர்கண்டு
கோலை விரைந்தெடுத்துக் கொண்டோங்கி யேயடிக்க 164

வந்தவனைப் பார்த்திரண்டு வாகான கையாலும்
அந்தஅடி யைவிலக்கி யப்போது தானகைத்தும் 165

இருந்தான் மதிமுகத்தோ டெவ்வான மானதிரு
அருமைக் குரியவனை யடிக்கமனம் வாராமல் 166

இகபரத்தி னாசையைவிட் டெல்லாங் கடந்தேகிச்
சுகமாக வேவாழும் சுத்தமெஞ் ஞானியர்கள் 167

மண்ணாசை பெண்ணாசை மற்றபொரு ளாசையுமே
எண்ணும லேதா னிருக்கும்பெரி யோர்ஞான 168

கண்ணாலே யும்அறியக் காணவுமே கூடாமுக்
கண்ணனையு மப்போது கண்டா ருலகிலுள்ளோர் 169

ஊனக்கண் ணூற்பார்க்க வுற்றுமவர் பாற்கூடி
கானவிளை யாடல்செய்த கற்பகச்செல் வக்கடவுள் 170

முன்னே தமதருளி னலிந்த மூதுலகந்
தன்னையுண்டாக் கிப்படைத்துத் தற்காத் தழித்திடமுன் 171
செப்புவினை யாட்டெல்லாஞ் செய்கின்ற ஞானபரன்
இப்போ தொருகூலி யாளாகி யேயிருந்து 172
திருவிளை யாடலெனச் செய்யும் அவ்வேளை தனில்
வருவாரா ளோட்டுகிற மாவீர ரப்போது 173
மாறுகோல் கொண்டு வருவார்கள் கூடநின்றே
கூறுவார் வேலையொன்றைக் கொள்வார்க ளாகையினால் 174
அடைகரை பார்க்க வதிவேக மானதொரு
நெடிய அலையொதுங்கி நேராய்வெள் ளம்போக 175
அவரவர்க ளுக்கே யளந்துவிட்ட பங்கெல்லா
மவரவர்கள் செய்தாரப் போதே யணைமலைபோல் 176
செவ்வையுட னேகரைகள் சீக்கிரஞ்செய் திட்டிருந்த
ஒவ்வொருவர் பங்கு முடனே சரிபார்த்தார் 177
அப்போ தொருபங் கடைபடா தேயிருக்கத்
தப்பிதம தாயிருந்த தாரெனவென் றேயறிந்தார் 178
கண்டார்பிட் டுண்ட கடவுள் தனையழைத்து
விண்டா ரடாதம்பி வேலைக்கா ராவெனவே 179
ஓரா யிரம்பிறைகண் டுண்மையுட னேதொழுத
பேரான வந்தி பெரிய கிழவிபங்கு 180
அடைபடா தேதெனவே அப்போ தெதிர்நோக்கித்
தடையே னடாதம்பி சாற்றுவா யென்றுரைத்து 181
எல்லார்பங் குங்கரைக ளிட்டிருக்க வேயின்னம்
நல்லாச்செய் யாதிருந்த ஞாயஞ்சொல் லென்றனரே 182
அப்போது சுந்தாரு மதற்கு விடைமொழிகள்
செப்பாமல் மன்மதன்போற் சிறந்தோ டெதிரில்நிற்க 183

இத் தண்டவீர ரிவனை மிகநோக்கி
அத்தகைய பங்கங் கடைபடா தேதெனவே 184

விசாரித்து வந்தியம்மை விட்டாளா ரென்றறிந்து
குசாமத்தோ டேதிரியுங் கூலியாள் நீதானே 185

என்றுகோ பங்கொண் டிவர்தா னடிப்பதற்கு
நின்று பிரம்பெடுத்து நேராய்ப்பார்த் தேயோங்க 186

பார்த்தே கடவுள் பயந்தே மயங்கிநின்று
ஆர்த்தே மிகவு மறிந்தா ரணப்பொருளால் . 187

தம்மை யுணர்ந்த தபசிகளுக் குப்பெருமை
செம்மை யுடன்தோன்றச் செய்தாரப் போதேதான் 188

வேலையது வாங்குகிற வீரர் தனைப்பார்த்து
ஜாலஞ்செய் தேயசட்டை தானே மிகப்பண்ணி 189

இருமாப் புடனே யிவர்தானிற் கும்பொழுது
பெருவாரி யாகவெள்ளம் பெலமா யதிகரித்து 190

வந்துதாம் வந்தியம்மை வாகான பங்குடனே
அந்தக் கரையு மடுத்த தொருகரையும் 191

கல்லிக் கரைத்துக் கடிதாப்போ கச்சிலர்கள்
சொல்லியச் சுந்தரனைத் தூவித் துரைக்கலுற்றார் 192

கண்டவரி லோர்மா கடுஞ்சித்த னென்பார்கள்
பிண்ட மதுக்கலைந்த பித்தனே வென்பார்கள் 193

முந்திவந்தி யம்மைபிட்டை மூர்க்க முடனிவன்றான்
வந்தேமாற் றித்தின்ற வாய்காஞ்ச யெத்தனென்பார் 194

இந்திர ஜாலவித்தை யிங்கு மிகக்காட்டித்
தந்திர மாய்கிற்குஞ் சமர்த்தனே யென்பார்கள் 195

ஐயோ யிவன்றனையு மாரென் றறியாமல்
வையகத்தி லேதானும் வாழ்ந்தோமென் பார்கள்சிலர் 196

பாடல்விஞ்சை கற்றவனோ பண்ணுடனே நின்றெங்கும்
ஆடல்விஞ்சை கற்றவனோ யாரோவென் றார்சிலபேர் 197

அன்றுகுபே ரன்போல வாஸ்தியுட னேவாழ்ந்து
என்றுஞ்செல் வச்செருக்கி லேய்ந்துகிடந் தேழுழ்ந்தி 198

பின்பு வறுமைப் பிணியா லிளைத்தவனோ
தென்பாக வேவாழ்ந்த செல்வர்களில் யார்மகனோ 199

ஆணழகு மன்மதன்கண் டாசைப் படயிவன்போல்
காணும்கா மிவ்வளவு கட்டழக னென்பார்கள் 200

அப்படியே யெங்கு மமையா வழகுபெற்றோ
னிப்படிவே லைக்குவந்த தென்னகா லங்களென்பார் 201

அன்றுதாய் தந்தையில்லா தவனாக வேதனியாய்ச்
சென்றே யலைந்து திரிந்தவனென் பார்சிலர்கள் 202

அப்படியா னாலுமென்ன அம்மைவந்தி தன்னிடத்தி
லொப்பி மிகக்கூலி யுற்றுறுதி யாய்வாங்கி 203

கணக்கிலுந் தன்பெயரைக் காதலுட னேபதிய
இணக்கமுடன் வைத்துமிவன்வேலை செய்யாமல் 204

ஒருவர்போய் நல்வார்த்தை யோதியுங் கேளாமற்
கருங்கல்லி லேயடித்த கனத்த முளைபோலே 205

எதுவு மிவன்காதுக் கேற்காமற் றானிருந்து
பதிற்சொல்லா மல்லசட்டை பண்ணித்திரி கின்றானே 206

அரிமர்த்தன பாண்டியராஜன் சமுகமுன்
தெரிய வீரர்கள் சென்றுரைத்தல்.

விருத்தம்.

மன்னவர் சபைக்குச்சென்று வாகுட னுரைக்கவீரர்
நன்னய மாகவேதான் நலமுட னேகினாமும்
இந்நதிக் கரைக்கேற்பட்ட யியல்புறும் வந்தியாள்தான்
சொன்னதோர் வார்த்தைகேளா தவனெனச் சொல்வோமென்றே *

——*-(o)-*——

கண்ணிகள்.

ஆகையால் நாம்போ யரசருக்குச் செய்தினை
வாகா யுரைத்து வருவோமேன் றேகடந்தார் 207

பாண்டியன்சேர் நற்சபையைப் பார்த்து வணங்கியையா
பாண்டி யாசேயிப் பட்டணத்தில் வாழ்ஜனங்கள் 208

அளந்துவிட்ட பங்கை யவரவர்கள் சம்மதித்து
வளர்ந்தமலை போறகரைகள் வாகுடனே கட்டுதற்கு 209

மண்ணைச் சுமந்துவந்தார் மாஜனங்க ளெல்லோரும்
விண்ணோ ரதிசயிக்க வேலைமிகச் செய்தார்கள் 210

இந்நகரி லேயிட் டெதார்த்தமாய் விற்குகிற
நன்னிலைசேர் வந்தியம்மை நங்கை யொருத்திபங்கு 211

அதுமாத் திரந்தா னடைபடா மல்லவட்குப்
பதிலாகக் கூலிகொண்டு பார்க்கவே வந்தவனும் 212

மன்மதனை வென்றதிக மாஅழக னாகிவந்து
தன்பேர் பதியவைத்துத் தான்பின்ன ரெவ்வளவும் 213

வேலைசெய்யா மற்றனே வேந்தர்பெற்ற செல்வர்கள்போற்
கால மதைப்போக்கிக் களிப்போடு பாடுகிறான் 214

விருதாக்கா லங்கழித்து வேலையொன் றுஞ் செய்யாமல்
உருமமிலா தேயவனும் உள்ளமதி லெண்ணமல் 215

நேராகப் பார்த்திவனும் நெஞ்சமது மஞ்சாமல்
யாரையும்பார்த் தேதா னசட்டைமிகப் பண்ணுகிறன் 216

ஆகையினல் நாங்க ளவனழகைத் தான்பார்த்து
வேக முடனவனை மிகவுமடிக் கப்பாயந்தோம் 217

ராஜனே தங்களிடம் நாங்கள்தெரி விக்கவந்தோம்
யோசனைசெய் யுங்களென வோதியவர் தக்கணமே 218

அதிகக்கோ பங்கொண் டமைச்சர்கள் தங்களுடன்
பதியாளும் வேந்தன்மிகப் பாய்ந்து விரைந்தெழுந்து 219

பார்த்து வருவமடை பட்டிருந்த வைகைநதிச்
சீர்த்திக் கரையையெனச் செப்பி நடந்தனனல் 220

வைகையாற் றங்கரைக்கு வந்தே யிவர்களுந்தான்
செய்கை சரியாகச் செய்தோர்க ளாகளெல்லாம் 221

மனங்களிகூ ரப்பார்த்து வாகுடனே தான்வரும்போ
தினந்துணையில் லாதவந்திக் கேற்பட்ட பங்கெதன்றூர் 222

அப்போ தடைப்பாரில் லாமையால் நீரோடித்
தப்பாக வேயிருந் தாழ்வான பங்கையுமே 223

அதற்கடுத்த பங்கை யலைகள்குத்தி யேயிடித்து
கதிப்போடு மோடுகிற கங்கைபெருக் கைப்பார்த்து 224

மன்னவனு மங்குகிற்கும் மாவீர ரைநோக்கி
யிந்நதியில் வந்திகரைக் கேற்பட்டா ளெங்கேயென 225

அரிமர்த்தன ராஜன் கூலியுடையோனைப் பிரம்பாலடித்தல்.

விருத்தம்.

செப்பியதோர் வார்த்தைதனை விசாரமும்
தெரிந்துவந்தி யின்கூலி யானைத்தேடிக்
கைப்பிடியாகப் பிடித்தங் கிழுத்துக்கொண்டு
கடுகிமன்ன னெதிரில்விடக் கண்டபோது
எப்படிநீ வேலைசெய்யா திருக்கலாமென்
றிவன்றனையும் நோக்கியடா யெங்குசென்றாய்
இப்படியிங் கணையுடையச் சரியாமோசொல்
லெனவிறைவன் சிறியடித் திட்டான்மன்னே *

——*(*)*——

கண்ணிகள்.

அடிக்குங்கோற் கைக்கொண் டருகில்நின்ற சேவகர்கள்
திடுக்கென்று தான்பயந்து தேடினார் கோபமுடன் 226

உள்ளும் புறமு மொளித்துமிக வேநின்ற
கள்வ னெனுங்கூலிக் காரன்கரத் தைப்பிடித்து 227

இழுத்துக் கொடுபோயங் கிவன்றான் கிழவிபிட்டைக்
கொழுத்திட வாங்கியுண்ட கூலியாளென் றேகாட்ட 228

கண்டானப் போதரசன் கையிற் பிரம்பெடுத்துக்
கொண்டா னடிப்பதற்குக் கோப மூட்டனேதான் 229

அண்டங் களையு மளவில்லாச் சீவரையும்
உண்டாக்கிதற்கோ ருடலாக வேகொண்ட 230

அக்கடவுள் தன்முதுகி லாங்கார மாகவுமே
திக்கெட்டுந் தானடுங்கச் சினந்துவிளா வாயடித்தான் 331

இப்படி யடித்தவுட னெங்கும் நிறைந்தசிவன்
தப்பிதஞ்செய் தோமெனவே தானினைந்தோர் கூடைமண்ணை 232

வைகையாற் றுள்ளுடைப்பில் வாகாகக் கொட்டிவிட்டு
மெய்மையா யக்கடவுள் மேலாய் மறைந்தனரே 233

அப்படியெல் லாவுயிர்க்கு மாதார மானசிவன்
தப்பிதமுஞ் செய்த தரத்தால் முதுகிலடி 234

பட்ட வடித்தழும்பு பாரோர் முதுகிலுந்தன்
இட்டமுள்ள பத்தினியா ளிவர்க ளுடம்பிலுமே 235

மந்திரி யுடம்பிலுமா மன்னர்குமா ரர்மேலுந்
தந்திரமா யங்குகின்ற தக்கவீ ரர்மேலும் 236

குதிரைகள்மே லும்யானைக் குட்டிகள்மே லும்படவு
மெதிரே மதுரேசர்க் கிட்ட அடித்தழும்பு 237

நவக்கோள்கள் மேலுமந்த நட்சேத்தி ரங்களிலுஞ்
சிவக்கவே கூடுமைந்து சீர்பூதங் கள்மேலும் 238

மாவேதங் கள்மேலும் வாய்ந்த அறுசமயத்
தேவர் முதுகினுமத் தென்னனடி பட்டதுவே 239

மற்றதே வர்மேலும் மகாரிஷிகள் தன்மேலும்
உற்றவடி யார்க ளுடம்பிலும் பட்டதுவே 240

வானவர்கள் மேலுமண்ணில் வாழ்மனிதர் தன்மேலுங்
கானகத்துப் பக்ஷி கரடி புலிமுதுகில் 241

பாம்புகறை யானெறும்பு பலவிதமா யாஞ்சரங்கள்
சோம்ப விவைகள் சுருக்கிடவும் பட்டதுவே 242

மலைமரம்புற் பூண்டாதி வானசரங் கள்மேலும்
முலைகுடியாப் பிள்ளை முதுகிலும் பட்டதுவே 243

அன்னைவயிற் றுள்ளபிள்ளைக் கடித்த தழும்புடனே
பின்னே பிறக்க பிரம்படியும் பட்டதுவே 244

சராசரங்க ளெல்லாந்தாம் தாமே மிகவாகும்
நிராதர வஸ்துவின்மேல் நேர்ந்த அடித்தழும்பு 245

உயிரில்லாச் சித்திரங்க ளுள்ளதுகள் தன்முதுகி
லயிராணி யுங்கண் டதிசயிக்கப் பட்டதுவே 246

எங்கும்படக் கண்டுதிடுக் கென்றெழுந்து மாயோனும்
அங்குதான் பாற்கடலி லப்போ விழித்தனனே 247

தாமரையி லாசனத்திற் றானிருக்கும் நான்முகனும்
ஆமா யிதென்னவென் றப்போ ததிசயித்தான் 248

இந்த்ரன் பயந்தான்மற் றெல்லாத்தே வர்களெல்லாம்
விந்தையிதென் றெண்ணியுடல் வேர்த்து நடுங்கலுற்றார் 249

அஞ்சாத விஞ்சையர்க ளாமனை ரியக்கர்சித்தர்
சஞ்சலம தாகவுமே சாரணர்க ளெல்லோரும் 250

உடம்பிலடிக் கொண்டார்க ளுடன்பட்ட வத்தழும்பைத்
திடம்படவே தானிவர்கள் செப்பியொரு வர்க்கொருவர் 251

காட்டிமிகப் பட்டவிதங் காணும லேமயங்கி
எட்டி லெழுதவுங்கூ டாதென் றியம்பலுற்றார் 252

அந்தக்கா லத்தினிலொப் பில்லா தவரான
இந்தப் பரமசிவ னெல்லா வுயிர்களுமே 253

தாமென் பதுமடியார் தனக்கெளியோ னென்பதுவும்
பூமண் டலத்திற் புராரியடி யும்மேற்று 254

அங்கேயோர் கூடைமண்ணை யப்போது கொட்டிவந்தி
பங்கடைத்து வெள்ளம்வற்றப் பார்த்தே மிகச்செய்து 255

கரையை யுயர்த்தியபின் கடவுள்வே லையைவிட்டு
விரைவாய் மறைந்தவுடன் வீரர்களுங் தானேகி 256

வந்தியம்மை யைத்தொடர்ந்து வாதிக்க வேயவள்தான்
சிந்தைமிக நொந்துவந்த சேவகரை யேநோக்கி 257

தண்டவீரர்கள்சென்றுரைத்ததைக் கண்டுவந்திகடவுளைத்துதித்தல்.

விருத்தம்

வந்தசே வகருரைத்த வார்த்தையைக் கேட்டுவந்தி
சிந்தைகைந் துருகியேது செய்குவேன் தேவதேவா
உந்தனை யல்லால்வேறிங் குதவிமற் றொருவருண்டோ
எந்தனை ரட்சித்தாளு மிறையேயென் றியம்புவாளே *

கண்ணிகள்.

மன்னனுற் றுன்பமுண்டோ மாவீர ரேசொல்லும்
முன்னனுப்பும் ஆளேன் முடிக்காம லேதுசெய்தான் 258
என்றவளுங் கேட்டுமினி யென்னுலா மோவெனவே
அன்று சிவனைநினைந் தாவலாய் நின்றழுதாள் 259
அப்போ தழும்வந்தி யன்பையுமே தேனுக
ஒப்பி மிகக்கூட்டி புண்ணவுமே செய்தபிட்டை 260
அமுதுசெய்து கொண்டருள்செய் யப்பர் சுந்தரேசர்
தமது பெருங்கருணை தானே மிகப்பொங்கி 261
தானுவந்த நந்திமுதல் தக்க கணநிபர்கள்
தோனும்படிக் கன்பு துரித முடன்கொண்டு 262
விண்மணிபோ லேதான் விளங்கு மொருதிவ்ய
தன்விமா னத்தைமிகத் தாரணியி லேயிரக்கி 263
ஐயமற நீவருவாய் அற்புதமா தாவெனவே
மெய்வந்தி யம்மை விமானமதின் மேலேற 264
கொண்டு விரைவாகக் கூட்டியே தேவர்களும்
அண்டங் குளிர அணிபூ மழைசொரிய 265
பண்ணோடு கூடினதோர் பாட்டு மிகப்பாடி
வண்ண முள்ள வேதமுடன் வாகான துந்துமியும் 266
விண்ணிலே தான்முழங்க மிக்க சிவனருளை
நண்ணியே நாளுமன்பர் நாடிப்போய் வாழுகின்ற 267
சிவலோகங் கொண்டுமிகச் சேர்ந்தார்கள் தானுமப்போ
பவவினைக ளைப்போக்கும் பகவான் கிருபையினால் 268

மண்ணைக்கொட்டிவிட்டு சிவபெருமான் மறைதல்.

விருத்தம்.

வெள்ளியம்பல வாணரும் விரைவினில் மண்ணை
யள்ளியே வைகை யாற்றுடைப் படைப்பதற்காகப்
புள்ளிமான்மழு பொருந்திய கரத்தினாற் போட்டார்
வள்ளிநாயகி மாமனும் வைகை நீர்வற்ற *

——:(-*-):——

கண்ணிகள்.

வெள்ளியம் பலத்தார் விரும்பியொரு கூடைமண்ணை
யள்ளியே கொட்டிவிட்டு அப்போதுமேமறைந்து 269

அடைக்குங் கரைநீள அசலம்போ லேயுயர்ந்து
உடைப்படைக்க வந்தவர்மற் றோர்க ளுடம்பினுமே 270

பிரம்படியுந் தானுமப்போ பெலமாகப் பட்டதைக்கண்
டறிந்துமிகத் தான்பார்த் தடியேன்மேற் பட்டதென்பார் 271

என்மேலும் பட்டதென வேயமைச்ச ராதியர்கள்
முன்னின்று நோக்கி மொழிந்தார்மற் றெல்லோரும் 272

விண்டொருவ ருக்கொருவர் விள்ளுகின்ற வார்த்தைகளைக்
கண்டந்த மன்னன் கருத்தில்மிகப் பட்டவுடன் 273

ஆசங்கை கொண்டங் கயர்ந்திருக்க வப்போதே
ஈசனறிந்துமண்ணை யெடுத்து உடைப்பதனில் 274

கொட்டிவிட்டுத் தான்மறைந்து கொண்டபெரு மான்விரைவாய்
அட்டியில்லா மல்முடித்து மாகாய மீதுநின்று 275

பாண்டியனை யன்னுள் படைகளைநோக் கிப்பரிந்து
வேண்டி யசரீரி விளம்பலுற்றான் யாதென்னில் 276

நேசமக ராஜனேநீ தேடியகற் செல்வமெல்லாம்
மோசமதில் லாமல்வந்த முக்கியம தானபொருள் 277

அந்தப் பொருள்களவை யாவுமெற்கு மன்பருக்கும்
இந்தமணி வாதவூ ரெமபடியா னின்பமுடன் 278

நம்மர்ப் பணமாக நல்லதிரு வாலயங்கள்
செம்மைதிகழ் கோபுரங்கள் செய்யவிழா மண்டபங்கள் 279

நந்தனங்கள் சோலைகளும் நல்லடியார் கூட்டமெல்லாம்
வந்தனங்க ளுண்டுநமை வந்தனஞ்செய் மாமடங்கள் 280

கூபமலர் கோகநகங் கொண்டமலர் நீர்த்தடங்கள்
தாபமகல் விக்கவெழிற் றண்ணீர் தருஞ்சாலை 281

சத்திரங்க ளாக சமைத்துதவி ஞனன்பாய்
இந்திரங்கள் செய்வோ ரிவர்க்குதவி னேர்மிகவாய் 282

இகத்திற் குபேரனென வேயதிக செல்வமுடன்
சுகத்தி லிருந்துஞ் சுகாதீத மாங்கயிலை 283

பதத்தின் சுகத்தை பரத்தி லனுபவிப்பார்
இதத்தி லமைந்தபல விந்தவித நற்றருமம் 284

செய்யமன மில்லார் திரவிய சகாயமில்லார்
செய்யவரு வோர்க்குதவி செய்யாம லேதடுப்பார் 285

என்னவித செல்வத் திருந்தாலு மந்துபுகுந்
தன்னவித நெற்போல யாவு மிழந்தலைந்து 286

எமன்வாதைக் குள்ளாகி யெய்தா நரகினிடை
அமிழ்வார்க ளென்ன வறிவாயால் மன்னவனே 287

நின்மந் திரியாகி நிற்கும் பதமளிக்க
தன்மந் திரியாமற் றக்க நெறிவழியே 288

உதவும்படி செய்தவந்த வுண்மையறி யாமலும்நீ
மிதமாக வெண்ணி மிகவருத்தஞ் செய்தவினை 289

துன்பத்தால் யாமுந் துரித மிகக்கொண்டு
அன்பாய் நரிகளையே ஆர்பரிக ளாய்ச்சமைத்து 290

கொண்டுவந்து நாய்கொடுத்தோம் கூடி யவைகளெல்லாம்
கண்டதின்பின் னன்றிரவிற் காணுமல் முன்போல 291

நரிகளாய்ப் போனதுவை நாடிநீ கண்டுபின்னுந்
தெரியாம லேயவனைத் தெண்டனைசெய் தேநெருக்கி 292

வருத்தப் படுத்தும் வரலாற்றை நாமறிந்து
கருத்திற் பொறுமலேவை கைகதிவெள் ளம்பெருகி 293

வரச்செய்தோம் நம்மேல் மகாவன்பு வைத்திருந்த
நரைத்தவந்தி யென்பவட்கு நற்கூலி யாளாகி 294

வந்தி கொடுத்தபிட்டை வாங்கி மகிழ்ந்துண்டு
அந்தவே லைக்குவந்துன் னுலடியும் பட்டோங்காண் 295

உடன்வந்தி பங்கி னுடைப்படைக்க வேகினைந்து
திடமாக மண்கொட்டிச் சீக்கிரத்தி லேகரையை 296

சரிப்படுத்தி யேயவட்குச் சார்ந்திருந்த துன்பமெங்குந்
தெரியவே தீர்த்துச் சிவலோக முஞ்சேர்த்தோம 297

ஆதலால் நாமிவ் வளவெல்லா மன்புடைய
வாதவூ ரான்பொருட்டால் வாகாக வேசெய்தோம் 298

இந்தவைதி கஞ்சிறந்த வின்பச் சிரேட்டமுளான்
அந்த மகிமை யறிந்துகொள்ள வில்லையேநீ 299

சந்ததமும் வாதவூர்த் தக்கோன்நம் பாலன்பு
சிந்தைமகிழ் கொண்டுனக்குச் செய்தான் மிகவும்நன்மை 300

இன்மைப் பயனுமன்றி யேற்று மறுமைப்பயனுஞ்
செம்மையுட னேயுனக்குத் தேடி மிகக்கொடுத்த 301

உத்தமனென் றேயவன்ற னுண்மையைக்கண் டேயறியாச்
சித்தமுனக் காகித் தெரிந்துகொள்ளா தேயிருந்தாய் 302

சந்தனபுஷ் பங்கள் சகல விதமான
இந்தப் புறப்பற்று இதமாய்த்தீர்ந் திட்டயிவன் 303

ஆகையா லேதா னவனல்ல யோகியென்று
வாகா யவன்றன் மனதின்படி போகவிட்டு 304

நீதான் விதிவழியே நின்றுமிக நீதியுடன்
சாதா ரணமாகத் தான்செலுத்தும் மன்னருக்கு 305

நியமித்த வாயுள் நிறைவாக வேயிருந்து
ஜெயமாய் நீங்காத செல்வக்கட லில்மூழ்கி 306

வாழ்கக் கடவையென்று வாக்களித்த வார்த்தைதனைத்
தாழ்தலுடன் மன்னனிரு தன்காதி லுங்குளிர 307

கேட்டுமிக வானந்தக் கெம்பீரத் தோடுமவர்
தாட்டிகம தாகவுமே தானென்ன செய்யலுற்றார் 308

அதிசயக் கடல்தனிலே யன்பாக மூழ்கியேநன்
நிதிசெய்த மந்த்ரிதனை நீணிலத்தி லேதேடி 309

சற்பத்தைக் கோவணமாய்த் தரித்த கடவுளார்தன்
அற்புதமாய் கோவிற் கப்போது தானும்வந்து 310

வாதவூ ராளி மனதிச்சை போலிருக்கக்
காதலுட னேயவனைக் கண்டுமிரு பாதமதில் 311

வீழ்ந்து வணங்கியையா வென்றுமிக வேநோக்கித்
தாழ்ந்திக் கடல்சூழ்ந்த தாரணியு மேயாண்டு 312

கொதிக்கும் நரகிற் குளிக்கவே ஆளானேன்
மதிக்குளே வந்த வகையறியா தேசெய்தேன் 313

தாமேநான் செய்த தவப்பலனா லிங்குவந்து
கோமானே நீரென் குறைதவிர்த்திப் போதெனக்கு 314

இகபரங்க ளுக்கு மெளிதான காரணமாய்
பகவான் செயலதனாற் பண்பாக வேயெனது 315

துன்பப் பிறவி தொடுத்த தொருநோய்க்கு
அன்பாக வேநீரு மரிய மருந்தானீர் 316

நானுமுமைச் சினந்தேன் நன்மையிட ரெண்ணாமற்
றானேயான் செய்த தகுதியிலாக் குற்றமெலாம் 317

மன்னித் தருளியுந்தன் மாமனம்போல் யானாண்ட
கன்னிலைசேர் தென்பாண்டி நாடெல்லாம் நீராண்டு 318

அதிகாரந் தங்கு மரசாட்சி செய்திந்தப்
பதியாளு வாயென்று பாண்டியனைப் போதுரைக்க 319

உரைத்தமொழி யைவாத வூரர் மிகக்கேட்டுச்
சிரித்தந்தப் பாண்டியனைச் சிராக வேபார்த்து 320

வாதவூ ராருரைப்பார் மாராஜ னேகேட்பாய்
ஓதமிகு மலைக ளோங்கியே வீசுகின்ற 321

சமுத்திரந்தா னுஞ்சூழ்ந்த சகலநாட் டுக்கெல்லாம்
அமித்திரனா வென்றுமர சாட்சிசெய் யக்கடவீர் 322

இனியுங்கள் தெய்வ மிசைந்தருளிச் செய்தபடி
தனியே விரும்பிமிகத் தானேசெய் யக்கடவீர் 323

உங்கள்குல தெய்வமென்ப துண்மையவ ராகையினாற்
பங்கிலிருந் தெந்நாளும் பாதுகாக் கக்கடவார் 324

நானு முமையடுத்து நன்றா யிருந்ததினாற்
றானேதான் வைதீக தர்மமெல்லாங் கண்டறிந்தேன் 325

இப்படித் தெளிந்திங் கிருந்த படியாலே
அப்படியே சித்தசுத்தி யதுகன் விளைந்ததுவே 326

அதுவும்விளைந் ததினா லப்போது பொய்க்கடவு
ளிதுவென் றறிந்து மிருதயத்தி லேதெளிவாய் 327

மெய்க்கடவு ளானபர மேச்சுரன்றன் றாட்பத்தி
முக்கியம தாகவுமே முன்வந்து தோன்றியதே 328

அப்படியே வந்தபத்தி யால்மாயை கூடவினால்
செப்புபந்த மோவிருத்தி சேர்ந்து நிகழ்ந்ததுவே 329

பவஞ்சவாழ்க் கைவிளைவிற் பட்டதுன் பமுமதுவே
அவைமெயல்லாம வெந்துகரி யாகக் கருணைவந்து 330

மெய்யுணர்வு ளின்பமதை மேலாகத் தர்ததன்றித்
துய்யமலர்ப் பாதமதைச் சூட்டிமிகத் தன்மயமாய் 331

வந்து கிடைத்ததென வாதவூ ராருமப்போ
சிந்தை மகிழ்வுகொண்டு செப்பினர் பாண்டியற்கும் 332

இன்பந் தனைத்தந் திதமாக வேபாத
மன்பாகச் சூட்டி யதுதன் மயமாக்கி 333

{ மாணிக்கவாசகர் பாண்டியன் முன்னில்
மதுரேசனை ஸ்தோத்திரஞ் செய்தல். }

சந்த விருத்தம்.

அகண்டபூ ரணமா யனுதியாய் நிறைந்த
அருட்பரஞ் சோதியாஞ் சிவமே
அகிலமும் படைத்துச் சராசர பேதம்
யாவுமுண் டாக்கிகாத் தளித்தும்
மகபதி முதலாய் வானவர் தனக்கும்
மானிலந் தன்னில் மூவாசை
மயக்கினும் பிறவித் துயரினு மடியார்
மாண்டிடா முத்திவீ டளித்தும்
பகலவன் மதியும் வலம்வரு கயிலைப்
பதியினும் உலகினுற் றலத்தும்
பறவியெம் போல்வர் மனத்தினு ளடங்கிப்
பரமென வணங்கமுன் னின்றும்
இகபரந் தனிலு மிணையிலா ஞசி
யெங்குநின் றுலவா யமர்ந்து
இன்புற கன்னு வருக்குவே தத்தை
இசைத்துமுன் விருத்திசெய் கடவுள் *

———:(*):———

கண்ணிகள்.

என்றிப் படியே யியம்பியந்தப் பாண்டியற்கு
அன்றுதிரு வாதவூ ரடிக ளுரைக்கலுற்றார் 334

வேதமதுக் குப்பொருள்தான் மிகவுமரு ளிச்செய்த
நாதன் றமதருளி னாலதிக மாகவேதான் 335

ஞானமய மாகியபொன் னம்பலச்சி தம்பரமாம்
மாநகர்போ கும்படிக்கு வந்துவந்து மெந்தனுக்கு 336

அனுக்கிரகஞ் செய்தெற் கருளினா ராகையினால்
எனக்கு மிசைந்தா ரிதுபோல வேநீரும் 337

இல்லைநகர் நான்செல் திரத்திற் கிசையுமென்று
அல்லல்வினை தீர்க்குமர னாலயத்தின் முன்சென்று 338

காரணனும் நான்முகனும் நாடியெங்குங் காணாத
காரணமாஞ் சற்குருவைக் காக்கும் பெருமானை 339

வாதவூர் மாணிக்க வாசகரும் பல்விதமாய்
வேத விதிப்படியே மெய்யன்பாய்த் தோத்திரித்து 340

தென்மதுரை வாழுஞ் சிவசோம சுந்தரமே
அன்பர்கள்சூழ் தில்லைநகர் யான்போய்வா ரேனெனவே 341

நடந்தா ரவர்மனது நந்திநண்பன் பாதமதில்
தொடர்ந்திழுக்கப் பாண்டியனார் துயரமொடு பின்வரவே 342

கண்டுநில்லும் நில்லுமென்று கால்வேக மாய்நடக்கப்
பண்டுவினை நீங்கவந்தப் பாண்டியரா ஜேந்திரனும் 343

சிலதூரம் முன்நடந்து சீர்வாத வூரரைப்
பலதரமும் ஸ்தோத்திரித்துப் பற்றிநிற்கும் பாண்டியற்கு 344

விடைகொடுத்துத் தில்லைநகர் வேதியர்கூட் டத்தில்மழ
விடையானை யேத்திநின்றார் மெய்வாத வூரராம் 345

மாணிக்க வாசகரை வாழ்த்தியே மன்னவனும்
ஆணிக் கனகமய மாநகர்சேர்ந் தாலயத்தில் 346

மாதேவி பாகனெனு மாசோம சுந்தரத்தின்
மீதே மனஞ்செலுத்தி மெய்புளகங் கொண்டுமிக 347

தன்கைப் பிரம்புகொண்டு தானடிக்க வேமுதுகு
அன்பாகத் தந்த அரனார்சந் தோஷமுற 348

தெரிசித்தா னந்தம் திரண்டுநிறைந் தேமகிழ்வு
விரிந்துபே ரன்புகொண்டு வேந்தனந்தப் பாண்டியனார் 349

ஓய்விலா தேநெஞ் சுருகித் தனைமறந்து
வாய்வழியே தோத்திரங்கள் வாழ்த்தினார் முன்னின்று 350

{ பாண்டியராஜன் சோமசுந்தரக்கடவுளை ஸ்தோத்திரம் செய்தல். }

விருத்தம்.

வாதவூ ரடிகளென்னும் மாணிக்க வாசர்தன்னைப்
பேதமாய் நினைத்துநான்செய் பிழைபொறுத் தடிமைகொண்ட
பூதநா யகனேவேதப் பொருள்முடி வாகிநிற்கும்
நாதனே உனையல்லாது நற்கதி வேறுமுண்டோ *

—*(*)*—

கண்ணிகள்.

துவாபர யுகந்தனில்மால் தோழனெனு மர்ச்சுனனூர்
அவாக்கொண்டு தன்சிலையா லடித்த அடித்தழும்பும் 351

அறுபத்து மூவ ரடியார் களிலொருவன்
உரிமையுடன் பூசித் துகந்தெறிந்த கற்றழும்பும் 352

கரத்தால் முதுகிலின்றென் கைப்பிரம் படித்தழும்பும்
புரமூன் றெரித்தோனே பொறுத்ததோ உன்மேனி 353

பதுமா சனன்மாயோன் பத்தர்முத்தர் தேவரிஷி
முதுமறையி லேழ்புவியு முற்றுமுயி ராய்நிறைந்தோய் 354

உலகினிலுள் ளோரறிய வோர்கூலி யாளாகிப்
பலமொழிகள் பேசிமண்ணைப் பாரமுடி மேற்சுமந்த 355

அறியேன் பிரம்பா லடித்த முதுகிலடி
உரிதா யெனக்குமடி யுற்றதினு லென்தேகம் 356

உந்தேதி மல்லால்வே றுண்டோ யெனக்குனருள்
தந்துமே ரின்பநெறி தான்காட்டு மாரியனே 357

பொய்யுடலை யானெடுத்துப் பொன்னுடன்பெண் மண்ணாசை
மெய்யெனவே நம்பியிந்த மேதினியை யாண்டதினுல் 358

மாணிக்க வாசர் மதிக்காப் பொருள்வினையம்
பாணிக்கா மற்செய்த பற்றறியாத் துன்புசெய்தேன் 359

நல்லோரென் றேயறியா நாயடியேன் செய்தபிழை
யெல்லாம் பொறுத்தருளு மிறையே பெருந்தகையே 360

அம்மையற்குப் பாதியுட லளித்த பரஞ்சோதி
இம்மைப் பரகதியு மீசனா லென்றுரைக்கும் 361

காரணத்தா லேயமைத்தாய் கர்த்தனேநின் னாற்படைத்த
ஆரணத்து வேதியனா யஞ்சுமலஞ் செய்தேனே 362

அடங்காத ஆசையினா லன்புநிறை மாதவனை
விடம்போற் கடித்து விழுந்தே னருநரகம் 363

விழாமல் நீதோன்றி மெய்யுணர்த்திக் காத்தாளும்
மாளாச் சுயஞ்சோதி மாதேவா யுந்தனக்கு 364

நாயேன் பதிலுதவி நாட்டினில்யான் செய்வதுண்டோ
தாயாகி யாண்ட தற்பரசி காமணியே 365

கானகத்து மாதவர்கள் கண்டுமறை யின்வழியே
தானடத்தும் யாகமதிற் றந்தவவிர்ப் பாகமது 366

அதிகருசி யில்லையென வம்மைவந்தி செய்துதிர்ந்த
புதியபிட்டை வாய்மலர்ந்து போதவமு துண்டனையோ 367

அமுதுண்ட காரணத்தா லன்னையிலா வந்தனுக்கு
சமுசயமில் லாமல்வந்தி சாமியுன்தா யானாளே 368

அன்னதா னம்வழங்கு மன்பர்சிறுத் தொண்டரவர்
சின்னக் குழந்தை சிரசுமுத லாமுருக்கள் 369

தன்னைவகுந் தேசமைத்துத் தானிடும்பின் னைக்கறியும்
மென்றுதின்றுங் கண்ணப்ப வேடனிட்ட மாமிசம்போல் 370

பிணையாகி வந்தி பிரியமுட னீந்தபிட்டுக்
கிணையில்லையென் றேதா னிருந்தமுத முண்டதன்றி 371

அடியார் துயர்தீர்த் தணையடைத்த சங்கரவென்
மிடிதீர்த்து காட்சிதந்த வேதப் பரஞ்சுடரே 372

காட்டேரி யைப்பரியாய்க் காட்டியெனை யேமாற்றிக்
கோட்டுருமால் யான்கொடுக்கக் கோமானே நீர்வாங்கி 373

முடிமேற் றரித்துமெனை மோசஞ்செய் பாசவினை
அடியோ டறுக்க அமைந்ததிரு மேனிதனைக் 374

கண்டு வணங்காமற் கடுங்குதிரை யாசையினால்
பண்டோரா வுத்தமனென்று பார்த்தங் குனைமறந்தேன் 375

இருமாந் திருந்தேனா னேளைபங்கா ளாவுனது
கருணா கடாக்ஷமதாற் கஷ்டமெல்லாந் தீர்ந்தேனே 376

அடிதேடி மாயன்வரா கத்தின்வடி வோடுசென்றும்
முடிகாண அன்னமென முன்வேதன் சென்றிடவும் 377

புண்ணா யிருவர்மனம் புழுங்கியெங்குந் தேடஅரன்
மண்சுமக்கு மொட்டரென்று மாமதுரை வந்ததினால் 378

இருவர்களுந் தேடியலுத் திருக்குஞ் சமயமதில்
பெருஞ்சோதி யாய்த்தோற்றும் பித்தா பிறைசூடி 379

மண்சுமக்க வாராயேல் மலரடிமால் காண்பாரே
கண்மூன் றுடையவெங்கள் கர்த்தனே அற்புதனே 380

என்று வெகுவா யிறைவன் றனைத்துதித்துச்
சென்றரண்ம னைக்குளுள சிம்மா சனத்திருந்து 381

சொக்கலிங் கத்தைத் துதித்துப் பிணிவிடைக
ளக்கறையாய்ச் செய்துவந்தா லருள்வார் பெருமோட்சம் 382

என்றுமனத் தெண்ணி யிருந்த பொருளையெல்லாம்
அன்றுமுத லாலயத்தி லானபணி செய்தனரே 383

மண்டபங்கள் வாவி மடப்பளிக ளைக்கியத்தின்
குண்டங்க ளுல்லாசக் கூடங்க ளும்வெகுவாய் 384

நந்திபீ டங்கள்பதி னாறுகால் மண்டபமும்
சுந்தரற்குப் பள்ளியறை தூங்குசப்ர மஞ்சங்கள் 385

அந்தமொடு செய்துவைத்தும் ஆறுகா லப்பூசை
சந்ததமு மேநடத்தி சங்கரன்மே லன்புகொண்டு 386

உலகத்தி லெவ்வுயிர்க்கு மோர்குறைவும் வாராமல்
தலமெல்லாந் தன்குடைக்கீழ் தானாண்டு பாண்டியனும் 387

வாழ்ந்தி வருநாளில் வாதவூ ராரமைப்புச்
சூழ்ந்த பணிவிடைகள் சோராமல் வேண்டுபொருள் 388

தருமம் வளர்ந்தோங்கத் தானனுப்பிப் பாண்டியனும்
அருமையொடு பூசை யகாலமதிற் செய்யாமல் 389

காலந் தவறாமற் கட்டளைக ளேற்படுத்தி
மாலயனற் றேவர் மகஞ்செய்து தோத்திரித்து 390

பொன்னம் பலவாணர் போதமருள் பாதமல
ரென்னு மறவா திருந்தரசை யாளுமன்னாள் 391

வாதவூ ராரால் வழங்கும் பொருள்தழைத்தும்
பூகலத்தி லேபெருகும் பொற்பாம பவுரணையில் 392

சந்திரனைக் கண்ட சமுத்திரம்போல் நாள்தோறும்
விந்தையாஞ் செல்வம் மிகப்பெருக வத்தருணம் 393

அரிமர்த் தனபாண்டி யன்செய் பெருந்தவத்தாற்
பெரியஜெக நாதனென்றோர் பிள்ளைதனைப் பெற்றெடுத்தான் 394

மதலைதனைக் கண்டு மகிழ்ச்சி மிகப்பெருகிச்
சுதனையன்பி னால்வளர்த்துச் சுந்தரரைப் போற்றிசெய்து 395

சிலநாட் கழித்துமன்னன் சேயான வன்றனக்கே
உலகமெல்லாந் தானாள வுற்றமுடி சூடினரே 396

வேந்தனாய்ச் செய்து விரிகடல்சூழ் பூவுலகைச்
சார்ந்தாளுந் தன்மைகண்டு சங்கைவிட்டுப் பாண்டியனும் 397

வாதவூ ரார்சொல் வழியையனுட் டித்துமன்னன்
நீதகல ஆதி சிவபெருமான் றன்னுடைய 398

கிருபாநோக் கத்தருளாற் கெட்டமும்ம லக்கசட்டை
வருகாம லானந்த வாரிதியி லேமூழ்கி 399

மாயவன்றே டிக்காணு மாதேவன் பாதநிழல்
நேயமுடன் சேர்ந்தான் நிலத்தைவிட்டுப் பாண்டியனும் 400

அரனடியைச் சேர்ந்தங் கரிமர்த் தனராஜன்
பிறவா நெறியடைந்து பெருமோக்கம் பெற்றதற்பின் 401

வாதவூ ராருமப்போ மாமுனிவ ராயெழுந்து
மாதவர்கள் கூட்டம்விட்டு மாதேவன் றன்னிடம்போய் 402

பாடித் துதித்துப் பரமானந் தம்பெருகி
நாடிநடே சாவுனது நற்பாதந் தாருமென 403

ஆகாச வாணியைப்போ லப்புடையார் சொல்லுகின்ற
சாகா நெறியடைந்த சற்குணனே நீயுமிப்போ 404

சிவதலங்கள் தோறுமனஞ் சென்றுநீ பாடிவந்தாற்
றவறுமற் பாதந் தருவோமென் றேமறைய 405

வரம்வாங்கி மெய்யுடைய மாணிக்க வாசகருந்
சிரமமெல்லாம் நீங்கிமிகச் சென்றார் தலந்தோறும் 406

ஆதிகா லத்தமைத்த வாயிரத்தெட் டுத்தலமும்
வேதியனர் கண்டுவெகு வேதமறை நூல்பாடி 407

சிவத்தோத் திரம்புகன்று சென்றுதில்லை நாயகன்முன்
தவநெறியாய் நிற்கவந்த தற்பரசு கக்கடவுள் 408

கண்டு மனமகிழ்ந்து காட்சிகொடுத் தேகடவுள்
தொண்டனே நம்பாற் சுகமாக வென்னாளும் 409

அன்னுகண்ட மேனியுமா ய்ழியாப் பதவிபெற்று
மன்னர்முத லோர்வணங்க மாமுனிவ னுகியேநீ 410

இருந்திடுநம் பாதநிழ லென்றுசிவ னுருளாக்கக்
குருந்தநிழற் கீழிருந்த கோமானு மாவடையார் 411

பாதமற வாமலரன் பாதசிழ வில்லொதுங்கி
மாதவத்தோ ராகினின்றார் மாணிக்க வாசகரும் 412

இக்கதையை யன்புற் றிருதயத்தி லேபதித்து
முக்கியம தாய்க்கேட்போர் மோட்சபத மேயடைவார் 413

சங்கரனார் மண்சுமந்த தன்கதையைச் சொல்வோரும்
மங்களம தாகவுமே வாழ்ந்திடுவா ரெந்நாளும் 414

எட்டி லெழுதிவைத்தோர்க் கெவ்வினையுந் தீர்ந்துவிடும்
பாட்டாய்ப் படித்தோர் பரகதிக்கா ளாவாரே 415

ஆதி சிவன்வாழி யம்பிகையுந் தான்வாழி
சோதிநெடு மாயன் றுலங்குமல ராள்வாழி 416

வல்லபைநே யன்வாழி மாமயிலோன் வாழிதினம்
சொல்லும் புகழ்வேதன் றுணைவி யுடன்வாழி 417

வெய்யோன் மிகவாழி விளங்குமதி யும்வாழி
துய்யமறை யோர்வாழி சொற்புலவோ ரும்வாழி 418

மாணிக்க வாசகர்தன் மலர்ப்பாத மும்வாழி
வாணிவந்தி யம்மையுட வம்மிசமுந் தான்வாழி 419

கழனிசூ ழும்புவியோர் களிக்க மிகவாழி
பழனியப்ப னன்பாய்ப் பகர்ந்ததமிழ் வாழியதே. 420

மதுரைச் சொக்கேசர் வந்திபிட்டுக்கு

மண்சுமந்த காதற் கண்ணிகள்,

முற்றுப்பெற்றது.

உ

பரமபதிதுணே.

பிட்டுத் திருவிழாயாக மண்டபச் சிங்காரக் கும்மி.

விநாயகர் துதி.

வெண்பா.

திருவிழாக் கூடற் சிவனுண்ட பிட்டுத்
திருவிழா மண்டபத்தின் சீரார்—ஒருகுமியைச்
செப்பப் பொற்றுமனைவாழ் சித்திக் கணேசனடி
செப்பமுட னேதொழுநெஞ் சே *

கும்மி.

சீரார் மதுரை வளர்சிவன் பிட்டுண்ட
திருவிழா மண்டபச் சிங்காரத்தை
ஏராருங் கும்மியாய்ச் சொல்வதற்குச் சிவ
னீன்றரு ளேங்கரன் றாள்துணேயே 1

பிட்டுத் திருவிழா மண்டபச் சிங்காரப்
பெருமைக் கும்மியைப் பேசுதற்கு
வட்ட முலைத்திரு வள்ளி மணுளனே
வந்தித்தெப் போதினுஞ் சிந்தைசெய்வாம் 2

சிங்கார மண்டபத் தின்சிறப்பை உயர்
செந்தமி ழாற்கும்மி செப்புதற்கு
கங்காளி பாகச் சடாதர னித்யசொக்
கலிங்க மூர்த்தி பதந்துணேயே 3

வந்திகைப் பிட்டுண்டு வந்தோன் திருவிழா
மண்டபச் சிங்காரஞ் சொல்லுதற்கு
தொந்தி வயிறனேப் பெற்றெடுத்த சிவ
சுந்தரி மீனுட்சி யைத்தொழுவேன் 4

சொக்கலிங் கேசருண் பிட்டுத் திருவிழாச்
சுந்தர மண்டபக் கும்மிசொல்லக்
கட்கங் கதைவில்லு சக்கரஞ் சங்குநற்
காட்சியில் வைத்தமால் காப்பாமே 5

மண்டலம் போற்றவே பிட்டுத் திருவிழா
மண்டபச் சிங்காரக் கும்மிசொல்ல
எண்டகு செந்திரு மான்கலை மானிவ
ரிருவர் தாளிணை யேத்திடுவாம் 6

ஆவணி மூலத் திருவிழா மண்டபத்
தமைந்த சிங்காரக் கும்மிசொல்லப்
பூவணி மாலை வடக்குவா சற்காரி
பொற்செல்வத் தம்மன்ப தம்பணிவாம் 7

கல்லாத வனிந்தச் சிங்காரக் கும்மியைக்
கற்றவர் முன்சொல்லக் கற்றதுபால்
எல்லாந்தன் னோடுசேர் நீருக்குக் காட்டிய
இன்பத்தைப் போலுற்ற யேற்றமிதே 8

மண்டபச் சிங்காரக் கும்மிகொட்ட இங்கே
மங்கைய ரெல்லோரும் வாருங்கொடி
கண்ட படியேண்டி சுற்றுகி றீரிந்தக்
காதற்கும் மிகொட்டிப் பாடுங்கொடி 9

மங்கள வல்லி மதுரவல்லி யெழில்
மந்தர வல்லி மதனவல்லி
தங்க முலைவல்லி சண்பக வல்லி
சவுந்தர வல்லி தருமவல்லி 10

பங்கய வல்லி பதுமவல்லி நல்ல
பார்வதி முத்துகா மாட்சிவல்லி
சங்கையில் லாத வழகு பொருந்திய
தங்கை நவரத்ன வல்லிசெல்வி 11

காமி கவுரி விசாலாட்சி சிவ
காமி யபிராமி நீலாட்சி
பூமி புகழும் பத்மாசனி ஜானகி
பூரணி நாரணி மீனாட்சி 12

ஜீவ ரத்னம்ஜெக ஜோதிரத்னம் வனத்
தெய்வ ரத்னமபி ஷேகரத்னம்
தேவ ரத்னமெழி லானரத்னங் கன
சிங்கார ரத்தினம் நாகரத்னம் 13

அன்னமுத்தே உய ராணிமுத்தே கன
அங்கமுத் தேதருந் தங்கமுத்தே
வன்னமுத்தே முதிர் கன்னல்முத்தே நல்
வயிரமுத் தேயெங்கள் மாரிமுத்தே 14

எல்லவரு மிங்கே வாருங்கோடி வைகை
யின்கரை நீரையும் பாருங்கோடி
நல்லவ ரேத்திடும் நாளென ஆவணி
நன்மதி மூலநாள் வந்ததடி 15

நாமின்று சென்றுநீ ராடுவோம் உமை
நாயகன் சீர்புகழ் பாடுவோம்
ஆமென்று கூடியே மங்கையர் தன்னிலோ
ரற்புத மோகன முத்துவென்னும் 16

மாதொடு சென்றுநீர் வைகையி லாடினர்
வான்கரை யேறி மகிழ்ந்துநின்று
பூதொடு பூங்கலை சொர்ன மணியணி
பொற்பொட்டு பட்டுப்பீ தாம்பரங்கள் 17

இச்சைப் படிக்கவர்க் கேற்ற படியெடுத்
தின்பசல் லாபமாய்த் தானணிந்தார்
பச்சை மயிலனைப் பெற்றவன் பிட்டுக்குப்
பட்சம்வைத் தோர்கூடை வைத்துவெ 18

வந்திந்த வைகையில் மண்சுமந்தே யடி
மாறன் பிரம்பா லடித்திடவே
எந்த உயிருக்கும் பட்டதடி யென்
றியம்ப நடந்த கதையல்லவோ 19

பார்க்கலாம் நம்பவந் தீர்க்கலாமே யெந்தப்
பாசமும் மோசமும் போக்கலாமே
ஆர்க்குக் கிடைக்குமே இந்தத் தரிசனம்
அங்கு பரிஜன மெவ்வளவோ 20

சேவிக்கக் கூடியே காத்திருக் கின்றனர்
சீக்கிரம் நாமெல்லாம் போவோமடி
ஆவிக் குறுதி தருஞ்சொக்க நாதனை
யன்பாய்ச் சேவிக்க வாருங்கொடி 21

என்றந்த மோகன முத்தழைக்க கின்ற
ஏந்திழை மார்மகிழ் வுந்தழைக்க
சென்றந்தத் தெய்வத் திருவிழா மண்டபத்
திற்கரு காய்வந்து கூடினர்கள் 22

இந்தப்பொன் மண்டப மிப்படிச் செய்தவ
ரிவ்வுல கத்தினி லாரடியென்
றந்த வழகிய மோகன முத்தை
யடுத்த அரிவையர் கேட்டவுடன் 23

மண்டபத் துள்ளசிங் காரமுங் கட்டவ
மைந்தவ ரலாறும் மற்றவையும்
கண்டவர் சித்தங் களித்திடவே சொல்லிக்
காட்டினள் மோகன முத்துமின்னாள் 24

சென்ற விரோதி வருடந் துலாம்முதற்
றேதியிற் சிங்காரத் தோப்பினேயே
மன்று புகழவிம் மண்டபங் கட்ட
மதித்து விலைக்கிதை வாங்கினதா 25

வாங்கின தாரென்று கேட்டிடிற் சொல்கிறேன்
மங்கையரே நீங்கள் கேளுங்கடி
ஓங்கும் மதுரா புரிவளர் வாணிய
ருச்சித நற்குலத் துற்பவித்தோர் 26

மணியம் நரசிங்க வேள்தவத்தில் வந்த
மைந்த னழகிய வேங்கடமால்
அணிதிகழ் நாட்டாண்மை மீனாட்சி நாதவேள்
அன்புடன் பெற்றருள் சுப்பமுகில் 27

சோழவந் தான்மணி யம்சொக்க பூபதி
சொல்மகன் சித்தனா தக்குரிசில்
வாழ்வுயர் நாட்டாண்மை அய்யாச்சாமி தவ
மைந்தன் குழந்தை மகராஜன் 28

மால்வெங்க டாசல வைசியன் செய்தவ
மைந்தனும் லெக்ஷ்மண மானபரன்
சால்புயர் சித்திர புத்திர ரத்தினந்
தந்தருள் புத்திர ரத்தினமாம் 29

மித்திர ரத்னம் பழனியப் பேந்திர
வித்தைக் களஞ்சிய மானரத்னம்
முத்துக் குபேரன் றவத்தி லுதித்தருள்
முன்னவன் கோவிந்த சாமிவள்ளல் 30

அன்னா னிளையவன் மாரியப் பேந்திர
அற்புத விற்பன சற்குணவான்
கன்னனும் பின்னிடத் தந்திடு மெங்கள்சொக்
கலிங்க சம்பன்ன துங்கமணி 31

சோழவந் தான்சொக்க லிங்க வுதார
சுதன் மலையாண்டி சுகவரதன்
சூழவந் தாரோர் கமிட்டிய தாய்க்கூடிச்
சொக்கற்கு மண்டபங் கட்டவென்று 32

தக்கதா யாலோசனை கள்செய்து செல்லத்
தக்க பணங்களுஞ் சேகரித்து
முக்கிய மாயிந்தச் சிங்காரத் தோப்பினை
முன்னே கிரையமாய் வாங்கினர்கள் 33

நன்மைக் குவந்த படியாலுஞ் சொக்க
நாயகர் வார படியாலும்
வன்மை திகழுமிச் சிங்காரச் சோலையில்
வளங்கள் மெத்த வளர்ந்ததுவே 34

நம்மையே போலிந்தச் சோலையு மோர்மங்கை
நாயகி யாகவே காணுதடி
செம்மையாய் மேற்றவழ் சந்திரனே முகச்
சீர்த்தியைக் காட்டுது பாருங்கொடி 35

மங்குல் குழலின் வளங்காட்டும் புடர்
வள்ளைக் கொடிகள் செவிகாட்டும்
பங்கமில் லாமுல்லை பற்காட்டும் எழிற்
பச்சைக் கிளிகள் மொழிகாட்டும் 36

தென்னங் குரும்பை தனங்காட்டும் வனச்
செம்முருக் கம்பூ விதழ்காட்டும்
பன்னுங் கமுகு களங்காட்டும் உயர்
பைங்கிளி மூக்கு நகங்காட்டும 37

வல்லிக் கொடியிடை யைக்காட்டும் சுவை
மாவடு கண்ணின் வனங்காட்டும்
மெல்லிய வாழை தொடைகாட்டும் திட
மேவிய வாளை வியன்காட்டும் 38

செங்க மலங்கள் பதங்காட்டும் என்ன
சீருஞ் சிறப்பும் பொலிந்ததுவே
மங்கள மாகவிச் சோலையிலே இந்த
மண்டபங் கட்டவே காட்பார்த்து 39

நந்தன வாவணி மாதத்திலே வரும்
நாலாறி ரண்டுற்ற தேதியிலே
சுந்தரச் சுக்கிர வாரம்நல் ரேவதி
சொல்லுந் தனுர்லக்கி னத்தினிலே 40

அமிர்த யோகஞ் சுபயோகந் தரும்
அற்புத மான முகூர்த்தமதை
எமது பழனி மலையடி வாரத்தில்
எங்கெங்கும் கீர்த்தி பிரபலிக்க 41

யாதவர் தம்புகழ் பேரோங்க மகா
அற்புத மாமடங் கட்டிவைத்தோன்
மாதவன் நாச்சிமுத் துச்சாமி குரு
வைத்திட மெத்த மகிமையதாய் 42

எல்லோருஞ் சம்மதச் சந்தோஷங் கொண்டாடி
யேற்றவா லோசனை யின்பேரில்
சல்லாபன் நம்முத்துச் சந்த்ர வரோதய
சற்குணன் நற்றவத் துற்பவித்தோன் 43

கோவிந்த வள்ளற் கிளையவனு மிந்தக்
கோவிந்தம் போலும் வுளர்புயத்தான்
பாவிந்த மாதிரி யான்பாடச் செய்த
பாக்கியவான் நற் சிலாக்கியவான் 44

வஞ்சக லோபர் வழுத்திடும் வார்த்தையை
மனத்திற் சற்றும் மதிப்பில்லையான்
தஞ்ச மென்றோர்களைக் காக்குந் தயாபர
சற்குணமே உருவான மெய்யான் 45

கல்வி யறிந்து கொடைகொடுக்குந் தேவ
கற்பக மஞ்சக் கதிகரத்தான்
செல்வஞ் சிறந்த குபேரனையே நிகர்
சீமான் மாரியப் பேந்திரனே 46

சிங்கார மண்டபங் கட்டிட மானேசர்
செய்ய மானேசராய்த் தேர்ந்தெடுத்து
சங்கை யில்லாமல் நியமித்துக் கட்டிய
தாகிய மண்டபம் பாருங்கடி 47

வைகை வடக்கெல்கை யாகுமடி வைகை
வந்திடும் மார்க்கம் கிழக்கெல்கையாம்
மையல் பெருகும் மதுரைநகர் தண்ணீர்
வைத்திடும் பம்புயர் மேற்கெல்கையாம் 48

ஆரப் பாளையஞ் சாலைவழி தெற்கி
லமைந்த யெல்கையாங் கண்டு கொள்வீர்
சீரப்பாற் சொல்கிறேன் கேளுங்கடி யக்தச்
சிங்கார மண்டபத் தின்னழகை 49

தச்சுமுழம் பதி னேழரை யரைக்கால்
தன்னச் சதுரம் சமபரப்பில்
உச்சிதக் கால்களோர் மூப்பத்தாறு விட்டு
உத்திரம் போதிகை மேற்பரப்பி 50

எட்டுப்பட்டம் பதி னறுபட்டஞ் செய்த
இக்கால்கள் விந்தையை யென்னசொல்வேன்
அட்ட கெஜங்களும மண்டபத்தைத் தாங்கி
யமர்ந் திருப்பதைப் பாருங்கடி 51

அத்திமு கன்சுப்ர மண்யன்தண் டேஸ்வரன்
அந்தமாய்க் கீழ்புரம் பாருங்கடி
பத்தியாய்த் துர்க்கை வடபுரத்தி லருள்
பாலித்து நிற்பதைக் கேளுங்கடி 52

கார்த்திகைக் காட்சி யண்ணமலை யார்தருங்
காட்சியை மேல்புரம் யாதுசொல்வேன்
மூர்த்தி கரங்கொணடு தென்பொதி காசல
மூர்த்திநம் தட்சண மூர்த்தியிதோ 53

மண்டபம் மத்தியிற் பாருங்கடி கோண
வட்டம் சதுரவட் டத்துடனே
எண்டிசையும் புகழ் வனச மாமல
ரிசைத்த விந்தையை யாதுசொல்வேன் 54

மண்டபத் துள்மேற் பனிரண்டு ராசிகள்
வைத்த வழகை மதிப்பவரார்
கண்டுகொள் வாழைப்பூப் போதிகை யிற்கிளி
காதலாய் நிற்கிற பாவனையே 55

மகரம் பலகொடி அன்னக்கொடி முதல்
மங்கள மான கொடிகளெல்லாம்
சுகரஞ்சி தந்தர உத்திரங்கள் தோறும்
சுந்தரங் காட்டுது பாருங்கடி 56

இந்திர விமான முள்ளவனை ஜெக
மெங்கெங்கும் கீர்த்தி புகழோங்க
இந்திர விமானந் தோற்றுது பாருங்கள்
இப்படி யுண்டோவப் பொன்னுலகில் 57

மத்தியிற் காந்தர்வர் பூச்சொரி பாவனை
வாய்த்தது மிக்க வலங்காரம்
சித்ரவி சித்ர நவமணி வேலைகள்
தேவர்கள் மெச்சத் தகுந்ததுவே 58

சிற்ப விதிகளிற் றேர்ந்தவன் வளர்
தெய்வ மயன்மதி கூர்ந்தவன்
விற்பன னும்பதி னெட்டாம் படியெனும்
விஸ்வக்ஞன் பெற்ற விவேகமணி 59

சுந்தா ராஜது ரந்தரனும் அவன்
சோதரன் கந்தசு தாகரனும்
இந்தநற் சிங்கார மண்டபங் கட்டுதற்
கேற்ற மதியாளர் தோழியரே 60

மன்மதா ஆவணி தேதி பதினான்கில்
மங்கள மாயிந்த மண்டபத்தை
தன்மதியான முறை முடித்த உயர்
தன்மதி யாளரா சாரிகட்கும் 61

கணக்குத் தருமரா ஜேந்திரனுக் கும்மிக
கண்ய மரியாதை யும்புரிந்து
வணக்கு மேரு மலைவில்லோனை பிட்டு
வந்திக்கு வந்து வணங்கிநின்று 62

கூலியாள் நானெனக் காட்டிப் பரிவுள்ளே
கொண்டவள் பிட்டினுக் காசைவைத்து
கோலிச் சிரமிசை கூடைமண் வெட்டிதோள்
கொண்டுநீர் வைகையின் மண்சுமந்து 63

பாண்டியன் கைப்பிரம் பாலடி பட்டுமிப்
பாரினி லன்பர்க் கெளியனென்னும்
காண்டகையு மண்ட பிண்ட சராசரங்
கட்குளுந் தானிறை கர்த்தனென்றும் 64

காட்டுந் திருவிளை யாடலின் யாகத்தைக்
காமனு மிச்சிக்குங் கன்னியரே
நீட்டும் விசித்திர அற்புதக்கோலஞ் செய்
சிங்காரச் சித்திர மண்டபமுன் 65

ஆண்டுகள் தோறும் வருந்திங்க ளாவணி
யமைந்த மூலநட் சேத்திரத்தில்
காண்டு மடியார் பவந்தொலைக்க வந்து
காட்சி கொடுத்துயா கம்முடிக்க 66

சொக்கலிங்க ரெங்கள் மீனாட்சி சிவ
சுப்ர மணியர் விநாயகர்சீர்
வைக்குந் திருவாத வூரராம் மாணிக்க
வாசகர் வந்தியம் மன்னுடனே 67

வந்திந்த வந்தியின் வம்மிஷத்தில் மிக
வக்குவ மாரிஷி யாலுதித்த
சுந்தர வாணிப வைசிய வாயிரத்
தொருவர் மண்டப மாமிதிலே 68

முன்னே நடந்த விதிப்படியே யாக
முற்றுந் திருவிளை யாடல்செய்து
தன்னேரில் லாதவள் வந்தியின் பிட்டுத்
தனைநெய் வேத்திய மாகவைத்து 69

தூபதீ பம்பல வாரா தனைகளும்
சொல்லுவ தொன்றுங் குறையாமல்
பாப சம்மார அருள் சிவசம்பு
பராபர திவ்ய பரம்பொருளே 70

சுத்த விலட்சண நின்மல சம்ப்ரம
சுப்ரம சம்பத சுந்தரனே
நித்த நிராமய சட்குண நிட்கள
நிட்சய தத்துவ அற்புதனே 71

சுந்தர ரஞ்சித மாதவ போதகத்
துரிய வதீத சுதாகரனே
இந்த்ர விமான அலங்கிர்த ஆலய
இன்ப கர்ணாகர வித்தகனே 72

அந்தரி மந்தரி சந்த்ர சடாதரி
அம்பிகை பாகத் தமர்ந்தவனே
சந்ததங் காவென் றடிபணிந் தேற்றிடத்
தக்க தரிசனந் தான்கொடுத்து 73

பின்னந்த வாணிபர் நற்குலத்தில் வந்து
பிரபல மோங்கும் பிரபலவான்
பன்னுங் கலிமங் கலரிஷி கோத்திரம்
பாலனஞ் செய்யுஞ் சிலாக்கியவான் 74

சீர்த்திமணியம் நரசிங்கம் வேள்தவச்
சிங்கமென் வேங்கடச் செல்வனுக்கு
ஆர்த்தி பரிவட்டம் சந்தன மாலைமுன்
அருளி மற்ற அனைவருக்கும 75

பூதிப் பிரசாதம் மரியாதையுஞ் செய்து
பொங்கும் கடல்போ லொலிமுழங்க
கோதிலா வாத்திய கோஷ்டத் துடன்ஜகா
கூடு முயர்மண்ட பத்துவந்து 76

ஆலயஸ் தானிகர் மற்றவர்க்கும் மரி
யாதை திருக்கை வழக்கமுதல்
சாலவே செய்தத் தினமுழுதும் அன்ன
தானம் பிராமணர்க் கும்இனர்க்கும் 77

வந்தவர் யாவர்ச்கும் செய்திடும் போஜன
வர்க்க வகைக ளடங்காது
கந்த மிகுஞ்சித்ர வன்ன வகைகளைக்
கற்பித் துரைக்கவுங் கூடாதே 78

ஆகிலும் சொல்கிறேன் கேளுங்கடி பொங்க
லாயிரங் கோடி ஜனத்துணவாம்
பாகியல் சர்க்கரைப் பொங்கல் ததியனம்
பாகம் விடாதசம் பாவன்னமும் 79

இன்புளி யன்னமும் வெற்றன்னமுஞ் சுவை
யிற்செறி பாயசம் நற்குளம்பும்
தென்புள்ளே மேவுங் கருணை வறையலும்
செப்புங் கறிக ளனந்தமொடு 80

போஜனஞ் செய்வித்த போதெழும் வாசனைப்
பொற்பினிற் றேவரு மிச்சைவைத்து
மாஜனக் கூட்டத்துள் வந்துண மாட்டாமல்
வானத்திற் சஞ்சரித் தேதிரிந்தார் 81

பாயாச மன்னங் கறிவகையைக் கண்ணுற்
பார்த்திட்ட போதிலும் பாருலகில்
ஆயாசம் நீங்கி உயிர்த்தெழுவாரொனில்
அற்புத மாரா லுரைத்திடலாம் 82

பச்சடி கூட்டுக்க றிக்கிச்சை வைத்திந்தப்
பார்க்கு ளடங்காத மையல்கொண்டு
உச்சித விச்சையாய்க் காத்திருப்பார் மனம்
ஒன்றின்மேல் நாடாது பார்த்திருப்பார் 83

இன்ன வளமிகு போஜன முண்டபின்
னெல்லோரு மின்பமாய்த் தான்கூடி
வன்ன நயக்கந்த சந்தன தாம்பூல
மாலை மலராதி யேகொடுத்து 84

அன்னமே சொல்லுவேன் கேளுமிம் மண்டபத்
தருகி னில்மன மேயுகந்து
இன்னிலந் தன்னில்வ ருமடி யார்க்கன்னம்
ஈய்ந்திடச் சத்திர மொன்றமைத்து 85

அன்னாளில் வந்திதெ லுமம்மை யன்புடன்
ஆலவாய்ச் சொக்கர்க்க லுதினமும்
பொன்னாரும் பிட்டுநெய் வேத்தியம் செய்தது
போல இவர்களு மவ்விதமாய் 86

சுந்தரச் சொக்கரைத் தானினைந்து கன
துன்ப மகன்றிட வேமகிழ்ந்து
விந்தையா யென்றுமநற் பிட்டு நெய்வேத்தியம்
விளங்கச் செய்தரு ளேபெறுவார் 87

நித்தமு மன்னம் சமைத்திடுவார் சிவ
பத்தர்க ளுண்ணக் கொடுத்திடுவார்
நத்திவந்தோர் முகம் பார்த்திடு வாரெந்த
நாளும் பசிநோயைத் தீர்த்திடுவார் 88

கூனு குருடுசப் பாணி யெவர்வரில்
குறைவில் லாதன மேகொடுத்து
வானங் கவிந்த புவியெங்கும பேர்பெற
வழங்கி னார்வணி கர்குலத்தோர் 89

வாணிபர் செல்வந் தழைத்தோங்கக் கவி
வாழ்த்தி வழுத்தும வளமைகொண்டு
வாணியைத் தன்நாவில் வைத்துப் புகழ்கவி
வாண னென்றெங்கும் மகிமைபெற்றோன் 90

தேசம் புகழ்ந்திடும் முத்தமிழ் வாரியாம்
சின்னச்சா மிக்கவி ராஜனுக்கும்
மாசம் பத்தாகவே மாலை யணிகலன்
வஸ்திரம் சொர்ன வகைகளுடன் 91

ஓங்கு சம்மானம் பலரும் புரிந்திட
யோகனும் மாரியப் பேந்திரனும்
பாங்குளோர் செய்த வரிசைக்கு மேல்நூறு
பங்கதிகஞ் செய்த பாக்கியவான் 92

கற்றிருந்தும் மட லோப குணத்தினைக்
கைவிடா னுத்தப் பசாசர்களைச்
சற்றேனுந் தன்னிடம் அண்டவொட்டாமலே
தாக்கிடு முக்ரப ராக்ரமத்தான் 93

மாநேசரான யெம் மானேஜர் கலை
மாநேசர் பாலினும் மாநேசர்
தானகன் னன்புகழ் கோவிந்த வள்ளல்
சகோதரன் மாரியப் பேந்திரனன் 94

மக்கள் கிளைமற்ற வாணிபர் யாவரும்
மங்கள மாக அவரவர்கள்
தக்க வளமனைக் கேகியே வாழ்ந்திது
சந்தத மோங்கித் தழைத்திலங்க 95

அம்பிகை பாகத் தமர்சொக்க நாத
ரடிமல ரேத்திப் புகழ்ந்துசிதம்
சம்பிரம மாகவே செல்வமும் புத்திர
சந்தான விர்த்தியும் உண்டாக 96

வாழ்ந்திருக் கின்றார்கள் மங்கையரே யிந்த
மண்டபங் கட்டிய மாதருமம்
சூழ்ந்த கடலுல கத்தினிலே யெங்கும்
சொல்லத் தகுந்தநற் கீர்த்தியன்றோ 97

சந்திர சூரிய ருள்ளவரை யிந்தத்
தருமம் நிலைநிற்கும் பாருங்கொடி
சுந்தரனும் சோம சுந்தர மூர்த்தியின்
சோதி யருளுந் துணைப்பதமும் 98

தந்திர மாய்வந்து தந்திடும் மார்க்கத்தைத்
தந்திர மாயிங்கு செய்தார்கள்
அந்தர தேவருங் கொள்ளற் கரியதாம்
அற்புதக் கீர்த்தியைப் பெற்றோர்கள் 99

மண்டபங் கட்டிய வாணிபரும் அந்த
வக்குவ மாமுனி தன்மரபில்
பண்டுவந்த தவ வந்தியும் வைசியர்
பண்புறு மாயிரத் தோர்குலமும் 100

வாழி யுலகம் மறைவாழி கலை
வாணி சரஸ்வதி தான்வாழி
வாழி திருமகள் மால்வாழி கூடல்
மாநகர் வாழ்மனு வோர்வாழி 101

வாழி கயற்கண்ணி அம்பிகை பாகம்
மருவிய சுந்தரர் வாழிமதி
வாழி கதிரடி யார்வாழி சைவ
வைதிக வாகமம் வாழியவே 102

மண்டபச் சிங்காரக் கும்மி.

வாழிவே லாயுதன் அத்தி முகன்பதம்
வாழி திருவாத வூரர்குரு
வாழிநற் சுந்தர ரப்பர்சம் பந்தர்தே
வாரத் தமிழ்மறை வாழியவே 103

வாழி நவக்ரகம் பூசுரர் வேதியர்
வாழி சிவபக்த ரானவர்கள்
வாழி அறுபத்து மூவர்களும் கற்பு
வாய்ந்த வனிதையர் வாழியவே 104

வாழிமுள் ளண்டர்ந்த னில்வசிக்கு மிந்த
வானுப வைஸ்ய குலகுருவாம்
வாழிபு ராணஞா னசிவாச் சாரியார்
மாதவத் தோர்முத்தர் வாழியவே 105

வாழிப வானியில் வாழும்வைஸ் யகுரு
வாகியே யெங்கும பிரபலமாய்
வாழி சிறந்த பிரவுடைக் ஞானசி
வாச்சாரி யார்முதல் வாழியவே 106

வாழி பழனி மடாதி பதியாய்
வழங்கிய நாச்சிமுத்துச் சுவாமி
வாழியிம் மண்டபங் கட்டி முடித்ததோர்
வள்ளல் கமிட்டிகள் வாழியவே 107

வாழியி தற்குப் பொருளுத விசெய்து
வந்திடு மாதன்ம வான்களுக்கும்
வாழி செல்வங்கள் மிகப்பெருகி உயர்
வாகவே யென்னாளும் வாழியவே 108

வாழிநம் மானேஜர் மாரியப் பேந்திரன்
மக்களுற் றோர்மற்றோர் வாழிதமிழ்
வாழியா யிக்கும்மி பாடினோ ராடினோர்
மகிழ்ந்து கேட்பவர் வாழியவே 109

பிட்டுத் திருவிழா யாகம்
மண்டபச் சிங்காரக் கும்மி,
முற்றிற்று.